# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்

ilakku.org

SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb

LIKE US! facebook.com/ilakku.ilakku.10

FOLLOW US! twitter.com/Ilakku1

இதழ் 292 | சனி, ஜூன் 22, 2024 | 16 பக்கங்கள்




## ரணிலுக்கு கைகொடுக்குமா இந்தியா?

அகிலன்



## நடைமுறைக்கு வரப்போகும் சொத்து வரி, வாடகை வரி

கலாநிதி எம்.கணேசமூர்த்தி

## கிழக்கில் மீண்டும் தமிழ்–முஸ்லீம் கலவரத்தை ஏற்படுத்த முயற்சி

மட்டு.நகரான்

## பிரித்தானியா தேர்தல்




## மீண்டும் நாம் ஏமாற்றப்படுவதற்கான தளம்

வேல்ஸிலிருந்து அருஸ்



© 2024 இலக்கு இணையம்

# தமிழ் அரச தலைவர் வேட்பாளர் தொடர்பில் தாயகத்தில் விழிப்புணர்வு கூட்டங்கள்

நடைபெற இருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி தமிழ் மக்கள் பொதுச் சபை தொடர் கலந்துரையாடல்களையும் கூட்டங்களையும் நடாத்தி வருகின்றது.

அதன் தொடர்ச்சியாக கடந்த வெள்ளிக்கிழமை மாலை கொடிகாமம் வர்த்தக சங்கத்தினருடனான கலந்துரையாடல் இடம்பெற்றது. கடந்த செவ்



வாய்க் கிழமை(18) சங்கானை கூட்டுறவுச்சங்க பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் இடம் பெற்றது.

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# பிரித்தானியா தேர்தலில் ஆளும் கட்சி படுதோல்வியடையும் – கருத்துக் கணிப்பு



எதிர்வரும் மாதம் இடம் பெறும் பிரித்தானியா நாடாளுமன்றத் தேர்தலில் தற்போதைய ஆளும் பழமைவாதக் கட்சி மிகப்பெரும் தோல்வியை சந்திக்கும் என கடந்த புதன் கிழமை(19) வெளியிடப்பட்ட பல்வேறு தளங்களில் மேற்கொள்ளப்பட்ட மூன்று ஆய்வுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 14 வருடங்களாக ஆட்சியில் உள்ள பழமைவாதக் கட்சி 650 நாடாளுமன்ற ஆசனங்களைக் கொண்ட பிரித்தானியா நாடாளுமன்றத்தில் 53 ஆசனைங்களையே கைப்பற்றும் சாத்தியங்கள் உள்ளன. தற்போதைய பிரதமர் ரிசி சுனாக்கும் தனது தொகுதியில் தோல்வியை தழுவும் சாத்தியங்களும் உள்ளன. இது பழமைவாதக் கட்சிக்கு மிகப் பெரும் பின்னடைவாகும் என Savanta and Electoral Calculus என்ற அமைப்பு நடத்திய ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# தென்னிலங்கையில் மற்றுமொரு அரசியல் கட்சி உதயம்



இலங்கையில் எதிர்வரும் தேர்தலை இலக்காகக் கொண்டு 'மக்கள் போராட்ட முன்னணி' என்ற புதிய அரசியல் இயக்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

"மாற்றத்திற்கான இளைஞர்கள்" என்ற அமைப்பின் தேசிய அமைப்பாளரும் 'அறகலய' செயற்பாட்டாளருமான லஹிரு வீரசேகர, பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் சம்மேளனத்தின் முன்னாள் அமைப்பாளர் வசந்த முதலிகே, முன்னிலை சோசலிச கட்சியின் முக்கிய தலைவர்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# இந்திய உளவு அமைப்பால் கொல்லப்பட்டவருக்கு கனடா அரசு கௌரவம்

கடந்த வருடம் கொல்லப்பட்ட காலிஸ்த்தான்சுதந்திரஅமைப்பின் தலைவரான ஹாதீப் சிங் நிஜாருக்கு கனேடிய நாடாளுமன்றத்தில் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு கௌரவம் வழங்கப்பட்டுள்ளது.

அவர் படுகொலை செய்யப்பட்டு ஒருவருடம் பூர்த்தியாகியுள்ள நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை(18) கனேடிய அரசு அவருக்கு தனது மரியாதையை செலுத்தியுள்ளது.



கனடாவின் வன்கூவர் பகுதியில் உள்ள சீக்கிய ஆலய வளாகத்திற்குள் வைத்து அவர்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# பிரான்சில் இடம்பெற்ற விநாயகம் அவர்களின் இறுதிவணக்க நிகழ்வு



பிரான்சில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் விநாயகம் அவர்களின் இறுதிவணக்க நிகழ்வு வியாழக்கிழமை(20) மிக உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினரும், முதுநிலைப் போராளியுமாகிய விநாயகம் (கதிர்காமசேகரம்பிள்ளை விநாயகமூர்த்தி) அவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை(4) அன்று உடல் நலக்குறைவு காரணமாக பிரான்சு தேசத்தில் சாவடைந்தார்.

தமிழீழ தேச மக்களின் மனதில் இடம் பிடித்து நிலைத்து விட்ட இவருக்கு மக்கள் இறுதி வணக்கம் செலுத்துவதற்காக வியாழக்கிழமை(20) காலை 10.00 மணிமுதல் பகல் 14.00 மணிவரை Espace Venise 30 Rte de Groslay 95200 Sarcelles என்னும் முகவரியில் இவரின் புகழுடல் வைக்கப்பட்டதைத் தொடர்ந்து உறவினர்கள், பல கட்டமைப்புகளின் உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பெரும் எண்ணிக்கையானோர் திரண்டு கண்ணீர் அஞ்சலி செலுத்தியதுடன் தமது இரங்கலைத் தெரிவித்திருந்தனர்.



தொடர்ச்சி 10ஆம் பக்கம்

# அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்குமிடையில் தொழில்நுட்ப இரகசியங்களை பாதுகாக்கும் உடன்பாடு



அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்குமிடையில் இரு நாடுகளினதும் தொழில் நுட்ப இரகசியங்களை பாதுகாக்கும் உடன்பாடு ஒன்று எட்டப் பட்டுள்ளது. அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜக் சுலிவனுக்கும் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலுக்கும் இடையில் இந்த உடன்பாடு கடந்த திங்கட் கிழமை (17) மேற்கொள்ளப் பட்டிருந்தது.

இந்தியாவின் புதிய பிரதமராக மூன்றாவது தடவை நரேந்திரமோடி பதவியேற்ற பின்னர் அமெரிக்காவின் பைடன் நிர்வாகத்தில் இருந்து முதலாவதாக இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்ட இராஜதந்திரி சுலிவன்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# சேனையூர் நெல்லிக்குளம் மலை உடைப்பு வழக்கு ஒத்தி வைப்பு

மூதூர்கிழக்குசேனையூர்கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட நெல்லிக்குள மலை பிரதேசத்தில் மலை உடைப்பதால் தமக்கு பாதிப்புள்ளதாக கல்மலை உடைக்கும் போது எதிர்ப்பு தெரிவித்த 10 பொதுமக்கள் 11.06.2024 அன்று சம்பூர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு 12 ஆம் திகதி மூதூர் நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டதையடுத்து அவர்கள்



அனைவரும் சொந்தப் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்கள்.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# இலங்கை ஐ.நாவின் பரிந்துரைகளைச் செயற்படுத்த வேண்டும்
## இணைத் தலைமை நாடுகள்

இலங்கை அரசாங்கம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் பரிந்துரைகளைச் செயற்படுத்த வேண்டும் என இணைத் தலைமை நாடுகள் தமது அறிக்கையில் கோரியுள்ளன. ஜெனீவாவில் நடைபெறும் மனித உரிமைகள் பேரவையின் 56ஆம் அமர்வில் இலங்கைத் தொடர்பான இணைத் தலைமை நாடுகளின் அறிக்கை கடந்த புதன்கிழமை(19) முன்வைக்கப்பட்டது. இதில் இந்த விடயம் முன்வைக்கப்பட்டுள்ளது.




கனடா, மலாவி, மொண்டெனேகுரோ, வடக்கு மாசிடோனியா, ஐக்கியஇராச்சியம்மற்றும்அமெரிக்காவை உள்ளடக்கிய இந்த குழுவின் அறிக்கையில் இலங்கை

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## தேர்தல் களநிலவரம் அறிய விரைந்து வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர்

*ஒருநாள் விஜயம் மேற்கொண்டு வியாழக்கிழமை(20) இலங்கை வந்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வடக்கு – கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் மலையகத் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் உள்ளிட்ட பல தரப்பினரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.*



*இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள நிலையில், இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கை வந்து சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.*

*இந்த பயணத்தின் போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை பிரதிநிதித்துவப்படும் 8 பேர் கொண்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சித் தலைவர்கள் குழுவுடன் ஜெய்சங்கர் கலந்துரையாடியுள்ளார்.*

*பாராளுமன்ற உறுப்பினர்களான சாணக்கியன், எம்.ஏ.சுமந்திரன, சிறீதரன், செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன், சி.விக்னேஸ்வரன், எஸ். கஜேந்திரன் மற்றும் மாவை சேனாதிராஜா ஆகியோர் இந்த கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.*

*உடல் நிலை காரணமாக சந்திப்பில் இரா. சம்பந்தன் கலந்துகொள்ளவில்லை. அவருக்குப் பதிலாக சாணக்கியன் இணைக்கப்பட்டிருந்தார்.*

*இதன்போது மாகாணங்களில் அபிவிருத்தி மற்றும் அதிகாரப்பகிர்வு தொடர்பான பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. பொது வேட்பாளர் குறித்தும் இந்திய வெளிவிவகார அமைச்சர் கேள்வி எழுப்பினார்.*

*“இலங்கைத்தீவில் தமிழருடைய தேசத்தையும் அதன் இறைமையையும் சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரிக்கும் சமஸ்டித் தீர்வை அடைந்துகொள்ள இந்தியா ஒத்துழைக்க வேண்டும்” எனக் கோரும் கடிதம் ஒன்றை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் இன்று இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரைச் சந்தித்த போது கையளித்தார்.*

*இலங்கையில் இனப்பிரசினைக்கானஅடிப்படை காரணியாக அமைந்தது இலங்கையிலிருக்கும் ‘ஒற்றை யாட்சி’ அரசியல் அமைப்பாகும். குறிப்பாக 36 வருடங்களுக்கு முன்னர் சிறிலங்கா அரசியலமைப்பில் 13ம்திருத்தச்சட்டம்கொண்டுவரப்பட்டுமுற்றுமுழுதாக நடைமுறையில் இருக்கும்போதே தமிழ்த் தேசம் மீதான இலங்கை அரசின் இனவழிப்பு நடைபெற்றிருந்தது. அதேவேளையில் யுத்தம் முடிவடைந்து 15 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் 13 ஆம் திருத்தம் தற்போதும் முழுமையாக நடைமுறையிலுள்ளபோதும்கூட தமிழ் மக்கள் மீது இலங்கை அரசு புரிந்த மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள், இனவழிப்புக் குற்றங்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை போன்றவற்றிற்கும் இன்றுவரை நீதி கிடைக்கவில்லை. குறிப்பாக, 13 ம் திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டு 36 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், அரசியல் ரீதியாக, அன்றைய காலத்துடன் ஒப்பிடுகையில் களச்சூழல் மேலும் மேலும் மோசமாகியே உள்ளது.*

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## இலக்கு

### ஜே. ஆர் வழியில் ரணில், இந்திய வழியில் ஈழத்தமிழரசியல்வாதிகள் ஈழமக்கள் இறைமையை இருப்பின் வழி உறுதிப்படுத்த பொது வேட்பாளர்

இந்திய வெளிவிகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் அவர்களின் சிறிலங்காவுக்கான யூன் 20ம் திகதிய வருகை மூன்றாவது முறையாக இந்தியப் பிரதமராகப் பதவியேற்றுள்ள மாண்பமை நரேந்திரமோடி அவர்களின் பாரத் சிறிலங்கா கூட்டாண்மை அடுத்த ஐந்தாண்டு காலத்துக்கு இலங்கைத் தீவில் தடையின்றித் தொடரும் என்பதை உலகுக்குத் தெளிவாக்கியுள்ளது. அதுவும் சிறிலங்காவில் இந்திய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட வீடுகளைச் சிறிலங்கா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவும், இந்திய வெளிவவிகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கரும் தங்கள் தங்கள் நாட்டு இறைமைகளின் பிரதிநிதிகளாக இணைந்து மெய்நிகர் வழி தொடக்கி வைத்தது, சிறிலங்காவினதும் இந்தியாவினதும் பொருளாதாரக் கூட்டு என்பது இருநாடுகளினதும் இறைமையிலும் கூட்டாண்மையை வெளிப்படுத்தியுள்ளது.

இந்தியாவின் 6 மில்லியன் நிதிஉதவியில் அமைக்கப்பட்ட சமுத்திர மீட்பு தொடர்பாடல் மையம் கொழும்பில் கடற்படைத் தலைமையகத்தில் தலைமை மையத்தையும், துணை மையத்தை அம்பாந்தோட்டையிலும் மற்றும் காலி, அறுகம்பே, மட்டக்களப்பு, திருகோணமலை, கல்லாறு, பருத்தித்துறை, மொல்லிக்குளம் ஆகிய பிரதேசங்களில் ஆளில்லாக் கட்டுப்பாட்டு மையங்களையும் கொண்டதாக முழுஅளவில் சிறிலங்காவின் கடற் பரப்பை உள்ளடக்கியதாகக் கட்டமைவுற்றுள்ளதும் இதனை சிறிலங்காவின் ஜனாதிபதியும் இந்திய வெளிவிகார அமைச்சரும் இணைந்து மெய்நிகர் வழி திறந்து வைத்ததும், பாரத் சிறிலங்கா கூட்டாண்மையின் நோக்கு, இருநாடுகளது பாதுகாப்பு என்பதையும் போக்கு, வேறுநாடுகள் இலங்கையில் மேலாண்மை பெறாது தடுப்பது என்பதையும் தெளிவாக்கியுள்ளது. இந்தியாவின் இந்த இராணுவ சந்தை நல அக்கறையில் சிறிலங்காவால் இனஅழிப்புக்கு உள்ளாகும், இலங்கைத் தீவின் இறைமையுள்ள மக்களினமான ஈழத்தமிழரைச் சிறிலங்காவும் இந்தியாவும் வெறுமனே சிங்கள பௌத்த நாட்டில் வாழும் ஒரு சமுகம் என புதிய வரைவினை வகுத்து ஈழத்தமிழரின் தேசிய பிரச்சினை அவர்களது வரலாற்றுத் தாயகத்தில் அவர்களின் பாதுகாப்பான அமைதியான வாழ்வையும் வளர்ச்சிகளையும் உலகு உறுதி செய்ய வேண்டும் என்ற ஈழத்தமிழரின் வெளியகதன்னாட்சி உரிமைக் கோரிக்கை என்பதைத் திசைமாற்றுகின்றன என்பது இலக்கின் கருத்து. இதுவே இனஅழிப்புக்கான தண்டனை நீதியைச் சிறிலங்காவும் பரிகார நீதியை ஈழத்தமிழரும் பெற இயலாமல் இருப்பதன் முக்கிய காரணியாகவும் உள்ளது. மேலும் இந்திய வெளிவிகார அமைச்சரின் இந்த உத்தியோகபூர்வ வருகையின் பொழுது அவர் சிறிலங்காவின் ஜனாதிபதி, சிறிலங்காவின் பிரதமர், சிறிலங்காவின் எதிர்க்கட்சியினர், மலையக மக்களின் பிரதிநிதிகள், ஈழத்தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் என எல்லோரையும் சந்தித்து அவர்களுடன் பேசியமை பாரத் சிறிலங்கா கூட்டாண்மை சிறிலங்காவின் அரசியல் செல்நெறியை நிர்ணயிக்கும் ஆற்றலாகவும் வளர்ச்சி பெற்றுள்ளமையையும் உலகுக்குத் தெளிவாக்கியுள்ளது.

வலுசக்தி மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க வலுச்சக்தி, எல் என். ஜி என்னும் திரவ இயற்கை எரிவாயு வழங்கல்கள், தரைவழி கடல்வழி பெற்றோலியக் குழாய்த் திட்டங்கள், இவற்றுக்கான ஆய்வுத் திட்டங்கள், சம்பூர் சூரிய மின்னுற்பத்தி நிலையத்தின் கட்டுமானப் பணிகளை நிறைவு செய்து பிரதமர் மோடி அவர்களின் வருகையின் பொழுது மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டு வருதல், திருகோணமலை காங்கேசன்துறை துறைமுக வளர்ச்சித் திட்டங்கள், யாழ் மற்றும் இரத்மலானை விமான நிலைய வளர்ச்சிகள் போன்ற திட்டங்கள் பலவும் பாரத் சிறிலங்கா கூட்டாண்மையால் இருநாடுகளின் இறைமைப் பகிர்வை உள்ளடக்கியதாகப் புதிய பரிணாம வளர்ச்சி பெற்றுள்ளமையை இந்திய வெளிவவிகார அமைச்சரின் வருகை உறுதிப்படுத்தியுள்ளது. ஆயினும் இந்தத் திட்டங்களில் ஈழத்தமிழர்களின் தாயக நில-கடல் பரப்புக்களும் மனிதவலுவும் நாளாந்த வாழ்வியல் ஆதாரங்களுமே பகிரப்படுகின்றமை நடைமுறையாக உள்ளது. இந் நிலையில் "தமிழ் மக்கள் இந்தியாவின் பாதுகாப்பு அரணாக இருப்பர். தமிழ் மக்களுக்கு இந்தியத் தலையீடு முக்கியம்" என்னும் கோரிக்கையை பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் அவர்கள் வெளிவிவகார அமைச்சருடனான சந்திப்பின் பொழுது கோரிக்கையாக முன்வைத்ததுமல்லாமல் "இந்திய சிறிலங்கா ஒப்பந்தம் அரசியல் ரீதியாக கையாளப்பட வேண்டும். அதன் வழி உருவாக்கப்பட்ட 13வது திருத்தம் சட்ட ரீதியாகக் கையாளப்பட வேண்டும். இவை குறித்து தாங்கள் அமைச்சர் அவர்களின் கீழுள்ள சவுத் பிளாக்குக்கு டில்லிக்கு வந்து உரையாட ஏற்பாடு செய்து தரும்படி" கேட்டதன் முக்கியத்துவத்தை அமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்தல் முக்கியம் என்பது இலக்கின் எண்ணமாக உள்ளது. மேலும் சிறிலங்காப் பாராளுமன்றத்தில் அதன் உறுப்பினர் விமல் வீரவன்ச சிறிலங்காவின் ஆட்பதிவுத் திணைக்களத்தின் தரவுக் கட்டமைப்புக்களை இந்தியாவுக்கு வழங்கல், அதானி குழுமத்துக்கு மின்கட்டமைப்பை வழங்கல் உள்ளிட்ட செயற்திட்டங்களை அடிப்படையாகக் கொண்டதாகவே இந்திய வெளி விவகார அமைச்சரின் வருகை அமைந்துள்ளதெனவும், உண்மைகளை வெளிப்படுத்த வேண்டும் எனக் கோரினார். இதற்குப் பதிலளித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் அவர்கள் "இந்தியாவைத் தவிர்ந்து எந்தவொரு நாடும் தமிழ் மக்களின் இனப்பிரச்சினையில் தலையிட முடியாது. இந்தியாவுக்குத் தான் முதலிடம் வழங்க வேண்டும். இந்தியாவை மீறி இங்கு எதுவும் அசையாது அதுதான் உண்மை. யதார்த்தம். இதனை விமல் வீரவன்ச போன்ற இனவாதச் சிந்தனையுடையவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்" என்றார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் சிறிதரன், வினோ நோகராதலிங்கம் போன்றோரின் கருத்துக்கள் ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் இந்திய வழியில் தீர்வை எதிர்பார்ப்பதை உறுதி செய்துள்ளது. ஆயினும் இந்தியா இதுவரை ஈழத்தமிழர்களின் இறைமையின் அடிப்படையில் எதனையுமே தீர்வாக வெளிப்படுத்தவில்லை என்பது வரலாறு. அதே வேளை அமைச்சருடனான சந்திப்பின் போது பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா மற்றும் தேசிய மக்கள் சத்தியின் தலைவர் அநுரகுமார திசநாயக்க தன்னிடம் 13வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த தாயராக உள்ளதாகக் கூறிய பொழுது அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு "காணி பொலிஸ் அதிகாரங்கள் உள்ளடங்கலாகவா? எனக் கேள்வி எழுப்பிய பொழுது சுமந்திரன் எம். பி அவர்கள் "ஆம்" எனக் கூறியமை பலருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. யாழ்ப்பாணத்தில் இருந்து திரும்பியதுமே சஜித் சிங்கள மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டால் மட்டுமே தான் அதனைச் செய்வதாகச் சொல்லை மாற்றியதும், அநுரகுமார திசநாயக்கா இலண்டன் சிலோவில் தெளிவாக "தற்போது நடைமுறையில் உள்ள மாகாணசபைகளையே தாங்கள் அனுமதிப்போம்" எனவும் கூறியமையை பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர்கள் அறியவில்லையா என்பதே அந்த ஆச்சரியத்துக்கான அடிப்படை. பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் போன்றோர் சிறிலங்காவின் உள்ளக பொறிமுறைகளுக்குள் ரணிலின் வழியில் தீர்வு பெறுவதில் இன்னமும் நம்பிக்கை உடையவர்களாக முயற்சிக்கின்றார்கள். ஆனால் ரணிலோ, ஜே. ஆரின் வழியில் ஈழத்தமிழர்களுக்குச் செய்யும் அத்தனை இனஅழிப்புச் செயற்பாடுகளையும் சட்டமாக்கி சட்டத்தின் நடைமுறைப்படுத்தல் என்கிற நியாயப்படுத்தல் ஊடாக உலகின் அனைத்துலகச் சட்டங்களில் இருந்து தப்பிச் செயற்படுவது வரலாறாக உள்ளது.

இந்நிலையில் பொது வேட்பாளர் ஒருவரை ஜனாதிபதி தேர்தலில் ஈழத்தமிழர்களின் இருப்புக்கான அடையாளமாக முன்னிறுத்த செயற்பாடு மறுக்கப்பட்டுள்ள ஈழத்தமிழரின் இறைமையைப் பலப்படுத்தி ஈழமக்களை ஒன்றுபடுத்தி இலங்கையில் தாயக தேசிய தன்னாட்சி உள்ள உலகின் மக்கள் இனம் ஈழத்தமிழர்கள் எனச் சிவில் சமுகத்தினர் முயற்சிப்பது, சமகாலத்தில் உலக அரசியலில் சிவில் சமுகங்கள் ஒன்றுபட்டு, அரசியலில் உள்ள இறுக்க நிலைகளைக் கட்டுடைப்பு செய்யும் உலகப் பொதுமையின் வழியிலானதாக அமைகிறது என்பதே இலக்கின் எண்ணம்.

**ஆசிரியர்**

# ரணிலுக்கு கைகொடுக்குமா இந்தியா?

அகிலன்

ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொண்டிருக்கும் நிலையில், இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரின் ஒரு நாள் விஜயமும், ஓகஸ்ட்டில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மேற்கொள்ளப்போகும் விஜயம் ரணில் விக்கிரமசிங்கவுக்கு உற்சாகத்தைக் கொடுத்திருக்கின்றது. தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது என்பதில் குழம்பிப்போயிருந்த அவருக்கு புதுடில்லியின் பிந்திய நிலைப்பாடு உற்சாகத்தைக் கொடுத்திருப்பதாகத் தெரிகின்றது.

இந்தியப் பிரதமரின் பதவியேற்புக்கு புதுடில்லி சென்றிருந்த ரணில் விக்கிரமசிங்க நரேந்திர மோடியால் விஷேடமாகக் கவனிக்கப்பட்டிருக்கின்றார். தனக்குப் பக்கத்திலேயே ரணில் இருக்க வேண்டும் என்பதிலும் மோடி கவனமாக இருந்துள்ளார்.

ஒரு கட்டத்தில் ஜனாதிபதி, "இந்திய மன்னர்களின் முடிசூட்டு விழாக்களுக்கு இலங்கை மன்னர்கள் தவறாது கலந்துகொண்டனர்" என்று வரலாற்று பாடமும் எடுத்திருக்கிறார்.

"உலகில் பத்தாவது இடத்தில் இருந்த இந்தியாவை ஐந்தாவது இடத்துக்கு கொண்டு வந்ததால்தான் மக்கள் என்னை மீண்டும் வெற்றி பெற வைத்தார்கள். வீழ்ந்த இலங்கையை மீட்டெடுத்ததால் நீங்களும் வெற்றி பெறுவீர்கள். வெற்றி பெற்று முதலில் இந்தியாவுக்கு விஜயம் செய்யுங்கள்" என்று இரவு விருந்தின்போது ரணிலிடம் மோடி கூறினாராம்.

"மூன்றாவது முறையாக பிரதமராக பதவியேற்ற நீங்கள் முதலாவதாக இலங்கைக்குத்தான் வரவேண்டும்" என மோடிக்கு வாழ்த்துத் தெரிவிக்கும்போது ரணில் தெரிவித்தார். ஆனால், இத்தாலியில் நடைபெறவுள்ள ஜி - ஏழு உச்சிமாநாட்டுக்காக போக வேண்டியிருப்பதை ஞாபகப்படுத்தியிருக்கிறார் மோடி,

**இந்த உரையாடல் பல அரசியல் யதார்த்தங்களை வெளிப்படுத்தியிருக்கின்றது!**

ஆனால், ஓகஸ்ட் முதல் வாரத்தில் மோடி இலங்கை வரவிருக்கிறார். பொதுவாகவே தேர்தல் சமயத்தில் இவ்வாறான விஜயங்கள் இடம்பெறுவதில்லை. மோடியின் விஜயம் ரணிலின் செல்வாக்கை கணிசமாக உயர்த்தும் என்ற எதிர்பார்ப்பு அரசியல் வட்டாரங்களில் காணப்படுகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எப்போதும் போல மக்களின் ஊகங்களுக்கு இடமளித்துவிட்டு மர்மமாகவே நடந்துகொள்கின்றார். குறிப்பாக, நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் அவர் போட்டியிடுவாரா என்பதற்கும் இன்னும் உறுதியான பதில் இல்லை. அதனைவிட இவ்வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுமா என்பது குறித்தும் கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

உயர் நீதிமன்றத்துக்கு எதிராக நாடாளுமன்றத்தில் ரணில் தெரிவித்த கருத்துக்களின் பின்னணியில் பொதிந்திருக்கக்கூடிய விடயங்களும் பல ஊகங்களை எழுப்பியுள்ளது. தனது பதவிக்காலத்தை ஒரு வருடத்தால் நீடிப்பதற்கான ஒரு முயற்சிதான் ரணிலின் இந்த நகர்வு எனக் கூறியிருக்கிறார் சுமந்திரன்.

ரணில் விக்ரமசிங்கவைப் பொறுத்தவரையில் மூன்று விடயங்களை அவர் எதிர்பார்க்கின்றார். அவை நிறைவேறினால், ஜனாதிபதித் தேர்தலில் நிச்சயம் போட்டியிடுவார். இல்லாவிட்டால் அவர் அப்போட்டியில் இருந்து விலகுவதற்கு வாய்ப்புகள் காணப்படுகின்றன.



முதலாவது, சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த 25 முதல் 30 எம்.பி.க்கள் கொண்ட குழு ஜனாதிபதியுடன் வந்து இணைவது. இது மிக முக்கிய விடயமாகும். இரண்டாவது, பொதுஜன பெரமுன தமது வேட்பாளரை முன்னிறுத்தாமல் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவளிக்க தீர்மானிக்க வேண்டும். மூன்றாவதாக, அனைத்து வடக்கு கிழக்கு முஸ்லிம் மற்றும் தமிழ் தலைவர்களும் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க முன்வர வேண்டும் என்பனவே இந்த மூன்று முக்கிய விடயங்களாக உள்ளன.

இந்த மூன்று விடயங்களும் நிறைவேறினால் ரணிலின் வெற்றி உறுதியாகிவிடும். ஆனால் இதுவரை இவற்றில் எவையும் நிறைவேறுவது உறுதி செய்யப்படவில்லை. தேர்தலில் போட்டியிடுவது குறித்த ரணிலின் உத்தியோகபூர்வமான அறிவித்தல் தாமதமாக இருப்பதற்கு இவையும் காரணம் என குறிப்பிடப்படுகிறது.

இந்த பின்னணியிலேயே, நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுக்களின் இளைஞர் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதித் தேர்தலில் நான் தோற்பதற்கு முதலில் தேர்தலில் போட்டியிட வேண்டுமென ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதியின் அறிக்கைக்கு, கூடியிருந்தவர்கள் சிரித்துப் பதிலளித்தாலும், அந்தப் பேச்சின் தீவிரத்தை புரிந்து கொண்டவர்களும் இருந்தனர். அதன் காரணமாகவே இந்த உரையாடலின் காணொளியை ஊடகங்கள் வெளியிடவில்லை எனவும் இதற்கு மறுப்பு தெரிவிப்பதற்கு ஜனாதிபதி தரப்பிலிருந்து எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

இதற்கு மேலதிகமாக நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய ஊடக சந்திப்பில், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க போட்டியிடுவதற்கான வாய்ப்புகள் குறைவு எனவும் ஜூலை மாதம் நடைபெறவுள்ள கருத்துக் கணிப்பில் ஜனாதிபதி மூன்றாவது இடத்தைப் பெற்றால், அவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவே மாட்டார் என்றும் கூறினார்.

இதனால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஏதேனும் குறிப்பை வழங்கும் நோக்கிலேயே ஜனாதிபதி இவ்வாறான உரையை நிகழ்த்தியுள்ளதாகவும் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

25 30 வரையான ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணைவார்கள் என எதிர்பார்த்த போதும் இறுதியில் ராஜித சேனாரத்னவுடன் மூவர் மாத்திரமே அரசாங்கத்துடன் இணையும் வாய்ப்பு காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரணிலைப் பொறுத்தவரையில் அவரது கட்சி பலமானதாக இல்லை. கீழ் மட்டத்தில் இறங்கி வேலை செய்யக்கூடியவர்கள் யாரும் அவருடன் இல்லை. ரவி கருணாநாயக்க, ருவான் விஜயவர்த்தன, வஜிர அபேயவர்த்தன போன்றவர்கள்தான் அவரது நம்பிக்கைக்குரியவர்கள். ஆனால், அவர்கள் ரை கட்டிக்கொண்டு மேல் அதிகாரிகள் போல செயற்படக்கூடியவர்களே தவிர, கீழ் மட்டத்தில் இறங்கி வேலை செய்யக் கூடியவர்கள் அல்ல.

சஜித் பிரேமதாஸ ஐ.தே.க.வை உடைத்துக் கொண்டு வெளியேறிய போது அவ்வாறு கீழ் மட்டத்தில் வேலை செய்யக்கூடியவர்களை அள்ளிச் சென்றுவிட்டார். இந்த நிலையில்தான் சஜித் பக்கமிருந்து 25 பேரையாவது ரணில் எதிர்பார்க்கிறார். ரணிலுக்கு வாக்களிப்பு நிலையங்களில் முகவர்களாகச் செயற்படுவதற்குக் கூட ஆட்கள் இல்லை என்பதுதான் உண்மை நிலை.

மேலும் பொதுஜன பெரமுனவின் இறுதித் தீர்மானத்தில் ஜனாதிபதிக்கு நம்பிக்கை இல்லை. எந்த நேரத்திலும் தம்மிக்க பெரேராவை கட்சியின் வேட்பாளராக மஹிந்த ராஜபக்ஷ அறிவித்தால், அந்தத் தருணத்தில் ரணில் ஜனாதிபதிப் போட்டியிலிருந்து விலகுவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு நடந்தால் ஜனாதிபதி மீண்டும் வெற்றி பெறுவதற்கு எவ்வித வாய்ப்பில்லையெனவும் பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக தம்மிக்க பெரேரா அறிவிக்கப்பட்டால், ஏற்கனவே ஜனாதிபதியுடன் இருக்கும் அமைச்சர்கள் குழு ஜனாதிபதியை கைவிட்டு பொதுஜன பெரமுனவுடன் அந்தத் தருணத்தில் இணையும் வாய்ப்புகள் அதிகம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த பொதுத்தேர்தலில் ஜனாதிபதியுடன் போட்டியிட்டு நாடாளுமன்றம் வருவதற்கு அவர்களுக்கு வாய்ப்பில்லை என்பதே அதற்குக் காரணம். இதன்படி மீண்டும் நாடாளுமன்றத்திற்கு வருவதற்கு குறித்த அமைச்சர்கள் மீண்டும் பொதுஜன பெரமுனவுடன் இணைந்து போட்டியிட வேண்டும்.

இதனால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எதிர்வரும் தேர்தலில் போட்டியிடாவிட்டால் அவரை கைவிட்டு செல்வதற்கு பலரும் தயாராகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது ஜன பெரமுன சார்பில் ரணில் போட்டியிட்டால் முழுமையான ஆதரவு என்பது தான் ராஜபக்ஷக்களின் நிலைப்பாடு. கட்சியைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்கு அவர்கள் முதலிடம் கொடுக்கின்றார்கள். ஆனால் பெரமுனவில் இறங்கினால் சிறுபான்மையினரின் வாக்குகள் கிடைக்காது என்பது ரணிலின் பிரச்சினை. பெரமுன ஆதரவளித்தால்தான் கீழ் மட்டத்தில் பெரமுனவின் ஆதரவாளர்கள் தனக்காக வேலை செய்வார்கள் என ரணில் நம்புகிறார்.

**இறுதியாக இருப்பது சிறுபான்மையினரின் வாக்குகள்தான்.**

சஜித் கடந்த வாரம் யாழ்ப்பாணம் சென்று ஐந்து நாட்கள் அங்கு தங்கியிருந்து மக்கள் செல்வாக்கை உயர்த்த முயன்றிருக்கின்றார். பல பாடசாலைகளுக்குச் சென்று உதவிகளை வழங்கியிருக்கிறார். 13 ஐ நடைமுறைப் படுத்துவேன்

தொடர்ச்சி 10 ஆம் பக்கம்

# நடைமுறைக்கு வரப்போகும் சொத்து வரி, வாடகை வரி



**இலங்கையில் வரி வருமானத்தை அதிகரிப்பதற்காக சொத்து வரி, வீட்டு வாடகை வரி போன்றவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. ஐ.எம்.எப். கொடுக்கும் அழுத்தத்தால் நடைமுறைக்கு வரப்போகும் இந்த வரிகளால் ஏற்படப்போகும் விளைவுகள் என்ன? விளக்குகிறார் கொழும்பு பல்கலைக்கழக பொருளியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.கணேசமூர்த்தி அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலியின் தாயகக்களம் நிகழ்ச்சிக்கு வழங்கிய நேர்காணலை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம். இந்த நேர்காணலை காணொளியில் YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**

**சொத்துவரி, வீட்டு வாடகை வரி என்பன தொடர்பாக அண்மைக்காலத்தில் பெருமளவுக்குப் பேசப்படுகின்றது. இது குறித்து மக்கள் மத்தியில் பல கேள்விகள் உள்ளன. இது குறித்த ஒரு விளக்கத்தைத் தர முடியுமா?**

இலங்கையில் செல்வ வரி, சொத்து பரிமாற்றல் வரி போன்றவற்றை உடனடியாக அமுல்படுத்துமாறு ஒரு பரிந்துரை முன்வைக்கப்பட்டிருக்கின்றது. அரசர்கத்தின் வருமானத்தை அதிகரித்துக்கொள்வதற்காகவே இந்தப் பரிந்துரை முன்வைக்கப்பட்டிருக்கின்றது. இவற்றை உடனடியாக நடைமுறைப்படுத்துவதில் பல பிரச்சினைகள் இருப்பதால், அதற்கான இடைக்காலத் தீர்வாக வீட்டு வாடகை வரியை நடைமுறைப்படுத்தலாம் என்ற பரிந்துரை முன்வைக்கப்பட்டிருக்கின்றது. இது ஒவ்வொரு வீட்டின் மீதும் விதிக்கப்படுகின்ற வரி என்றவகையான கருத்துத்தான் வெளிப்படுத்தப்பட்டது.

பாராளுமன்றத்தில் இது தொடர்பில் தெளிவுபடுத்தி உரையாற்றிய ஜனாதிபதி, எவரும் தாம் வசிக்கும் வீடுகளுக்கு வரி எதனையும் செலுத்த தேவையில்லை. அதற்கு சோலை வரி மட்டும்தான் செலுத்த வேண்டும். அது ஏற்கனவே உள்ள ஒரு வரி என்ற வகையில் கருத்து வெளியிட்டிருந்தார். செல்வந்தர்கள் தமது வீடுகளை வாடகைக்குக் கொடுக்கும் போது விதிக்கப்படுகின்ற ஒரு வரியாக மட்டுமே இது இருக்கும் என்றும் கூறியிருந்தார். 90 வீதமான குடியிருப்புக்கள் இதிலிருந்து விலக்களிக்கப்படும் என்றும் தெரிவித்திருந்தார்.

அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் ஏதோ ஒருவகையில் வருமானத்தைத் திரட்ட வேண்டும் என்றவகையில்செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது. ஏனென்னால் இப்போது திரட்டப்படுகின்ற வருமானம் போதாவது என்ற ஒரு நிலையைக் கொண்டுவந்து, வரி வருமானம் 15 வீதத்தினால் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற அழுத்தத்தைக் கொடுப்பதால், இதனைச் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது. 2022 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இருந்த நிலைமைகளுடன் ஒப்பிடும் போது இப்போது வரி வருவாய் 11 வீதம் அதிகரித்திருக்கின்றது. அவர்கள் உண்மையில் எதிர்பார்த்தது 14 சதவீதம் என்ற இலக்கு. ஆனால், அது அடையப்படவில்லை. அண்மையில் நடைபெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் மீளாய்வின் போது 15 வீதத்தை அடைந்துவிடுங்கள் என்பதற்கான அழுத்தம் கொடுக்கப்பட்டது. இந்த அழுத்தங்களின் பலனாகத்தான் இந்த சொத்துவரி அல்லது வீட்டு வாடகை வரி நடைமுறைக்கு வரவுள்ளது.

**இந்த வீட்டு வாடகை வரி அல்லது சொத்துவரி எப்போதிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவிருக்கின்றது?**

அடுத்த வருடத்திலிருந்துதான் இது நடைமுறைப்படுத்தப்படும் என்ற வகையில்தான் கருத்துச் சொல்லப்பட்டிருக்கின்றது. அடுத்ததாக வரக்கூடிய நிதி ஆண்டில் இருந்து இது நடைமுறைப்படுத்தக்கூடிய வாய்ப்பு இருப்பதாகத் தான் சொல்லப்படுகின்றது. ஏனென்றால், இவ் வருடம் தேர்தல் வருவதால், இவ்வருடத்தில் வரவு செலவுத் திட்டம் முன்வைக்கப்படமாட்டாது என்ற கருத்து முன்வைக்கப்படுகின்றது. அதனால், புதிதாக வருகின்ற அரசாங்கம் அடுத்த வருடத்தில் முன்வைக்கவிருக்கும் வரவு செலவுத் திட்டத்தில் ஒரு பகுதியாக இது முன்வைக்கப்படக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன.

**சர்வதேச நாணய நிதியம் இது போன்ற விடயங்களில் கடுமையான அழுத்தங்களைக் கொடுத்துக்கொண்டிருக்கும் நிலையில் அரசாங்கம் இந்த அழுத்தங்கள் அனைத்துக்கும் உள்ளாகாமல் செல்ல முற்படும் ஒரு நிலை உள்ளதா?**

அவ்வாறில்லை. சர்வதேச நாணய நிதியம் எள் என்று சொன்னால், இவர்கள் எண்ணெயாக இருக்கும் நிலைதான் காணப்படுகின்றது. அவர்களைப் பொறுத்தவரையில் இந்த இந்த வரிகளைக் கூட்டி வருமானத்தை அதிகரியுங்கள் என்று சொன்னதாகத் தெரியவில்லை. அரசாங்கத்தின் வரிகளைப் பார்த்தால், இலகுவாகப் பிடித்து விடக்கூடியவர்களை இலக்கு வைத்ததாகவே இந்த வரிகள் உள்ளன. குறிப்பாக மாதந்த சம்பளத்தைப் பெறுபவர்கள் இலகுவாக இந்த வரி வலையமைப்புக்குள் வந்துவிடுவார்கள். ஏனென்றால், அவர்களுக்கான சம்பளத்திலிருந்தே இந்த வரியை அறவிட்டுக்கொண்டு மிகுதியைக் கொடுக்கக்கூடியதாக இருக்கும்.

ஆனால், வணிகர்கள் மற்றும் முறைசாராத வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் இலகுவாக வரிக்கட்டமைப்புக்குள் வரக்கூடியவர்கள். ஆனால் அவர்களை விடுத்து இவ்வாறு இலகுவாக வரியைப் பிடிக்கக்கூடியவர்களை இலக்கு வைத்ததாகவே அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன.

அதுமட்டுமன்றி அண்மையில் பாராளுமன்றத்தில் சொல்லப்பட்ட மற்றுமொரு கருத்து என்னவென்றால், மதுசார உற்பத்தில் ஈடுபடுபவர்களுக்குக் கூட வரிச்சலுகை வழங்கப்பட்டது. அதாவது, செல்வாக்கு மிக்க பெரும் செல்வந்தர்கள் மீது விதிக்கப்படும் வரி தளர்த்தப்பட்டு இலகுவாகப் பிடிக்கக்கூடியவர்கள் மீது அதிக வரியைச் சுமத்தித்தான் இந்த வரி வருமானம் பெறப்பட்டிருக்கின்றது. அகவே, இன்னும் இந்த மக்கள் மீது வேறுவேறு வரிகளைச் சுமத்தி அவர்களுடைய கொள்வனவு சக்தியைக் குறைத்து அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை இழிவு நிலைக்குத் தள்ளி அவர்களை நெருக்கடிக்குள்ளாக்குவது மோசமான ஒன்று என்றுதான் நான் பார்க்கின்றேன்.

**சர்வதேச நாணய நிதியத்தின் மீளாய்வுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இதில் எவ்வாறான விடயங்கள் ஆராயப்பட்டன? இதன் விளைவுகள் எவ்வாறானதாக இருக்கும்?**

இந்த ஆய்வின் பின்னர் இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு ஒரு பாராட்டு கிடைத்திருக்கின்றது. குறிப்பாக இந்த வரி வருவாய்களை அதிகரித்தமை மற்றும் பணவிக்கத்தைக் கட்டுப்படுத்துதல் போன்ற இலக்குகள் அடையப்பட்டிருந்தமைக்கான பாராட்டு ஒன்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதேவேளையில், இப்போதுள்ள நிலைமை கத்தி மீதுள்ள ஒரு நிலைமை போன்றது என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். வரி வருவாயை அதிகரிப்பதற்காக தற்போது முன்னெடுக்கப்படுகின்ற நடவடிக்கை மேலும் தீவிரப்படுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், எவ்வாறான வரிகள் மூலமாக அதனைச் செய்ய வேண்டும் என்பதற்கான விளக்கங்கள் அங்கு இல்லை. அதனைத் தீர்மானிப்பது இலங்கை அரசாங்கத்தின் தனிப்பட்ட விவகாரமாக இருக்கின்றது.

சர்வதேச நாணய நிதியம் சொன்ன பல விடயங்களை அரசாங்கம் செய்திருக்கின்றது. ஆனால், அதில் விடுபட்ட விடயங்களாக ஆட்சி முறையின் வெளிப்படைத் தன்மை, அதனுடைய நம்பகத்தன்மை, பொறுப்புக் கூறும் தன்மை என்பன தொடர்பாக ஐ.எம்.எப். விதித்த

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# ரணிலுக்கு நிழல் பாதுகாப்பு வழங்கிய புலிகள்:
# 2005 தேர்தல் புறக்கணிப்புக்கு யார் காரணம்?



இலங்கையின் ஒன்பதாவது அரசு தலைவருக்கான தேர்தலை மையமாக கொண்டு தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்கவுக்கான ஆதரவின் வெளிப்பாடாக 2005 ஆம் ஆண்டு தேர்தல் புறக்கணிப்பு முடிவு தொடர்பான கருத்துகள் மீண்டும் முதன்மைப் படுத்தப்பட்டு வருகிறது.

"யாழ்ப்பாணம் மாவட்டத்தின் அபி விருத்தியிலும், மக்களின் அபிவிருத்தியிலும் ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தியுள்ளார். 2005 இல் உங்கள் பயணத்துக்கு வடக்கு மக்கள் தடையாக இருந்திருக்கலாம், அதை வட பகுதி மக்கள் இப்போதாவது வருத்தத்துடன் நினைவு கூர்வார்கள் என நம்புகின்றேன்." என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்னிலையில் தமிழரசு கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்த கருத்து வழமைபோன்று அரசியல் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

கடந்தகால தீர்மானங்கள் குறித்து விமர்சிக்கும் எம்.ஏ.சுமந்திரனின் போக்கு இனச்சுத்திகரிப்பில் தொடங்கி தற்போது 2005 தேர்தல் புறக்கணிப்பு தொடர்பில் வந்து நிற்கிறது. இவை நிச்சயமாக தமிழர்களது எதிர்காலம் குறித்தான நகர்வுகளின் பிரதிபலிப்பாக அன்றி அவர் சார்ந்திருக்கும் பெருந் தேசியவாத ஆதரவு நிலைப்பாட்டின் வெளிப்பாடாகவே பார்க்க முடியும்.

தமிழர்களது கடந்தகாலம் தொடர்பில் வரலாற்று சூழமைவுகள் தொடர்பான மதிப்பாய்வுகள் இன்றி பொத்தம் பொதுவாக இவ்வாறு கருத்துகளை கூறுவதானது முகநூல் போராளி வகையறாக்களின் நிலையின் வெளிப்பாடேயாகும்.

**ரணிலுக்கு யாழ்ப்பாணத்தில் நிழல் பாதுகாப்பு வழங்கிய புலிகள்**

கடந்த 2005 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 06 ஆம் திகதி அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க யாழ்ப்பாணம் விஜயம் மேற்கொண்டிருந்தார். ஆழிப்பேரலை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிடுவதற்காக டொக்டர் ஜெயலத் ஜெயவர்த்தன உள்ளிட்ட குழுவினருடன் வந்திருந்தார்.

அப்போது ரணில் - பிரபா ஒப்பந்தத்தை அடிப்படையாக வைத்து தென்னிலங்கையில் ஏற்படுத்தப்பட்டிருந்த இனவாத கொதிநிலையின் பின்னணியில் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கம் கலைக்கப்பட்டிருந்தது. இதன்காரணமாக பிரதமராக இருந்த ரணில் விக்ரமசிங்க எதிர்க்கட்சி தலைவராகும் நிலையேற்பட்டிருந்தது.

இவ்வாறான நிலையில் யாழ்ப்பாணத்தில் வைத்து ரணிலுக்கு ஏதாவது ஆபத்தை ஏற்படுத்தப்படலாம் என்ற அடிப்படையில் இலங்கை அரச படைகளின் பாதுகாப்பிற்கு மேலதிகமாக புலிகள் நிழல் பாதுகாப்பினை வழங்கியிருந்தமை தொடர்பில் அவர்களது வாகனத் தொடரணியை பார்த்த பலராலும் அறியப்பட்டிருந்த விடயமாகும். இது தமிழ்த் தேசிய அரசியலின் இடைச்செருகலான எம்.ஏ.சுமந்திரன் போன்றோருக்கு தெரிந்திருக்க நியாயமில்லை.

முன்னாள் பிரதமரும் எதிர்க்கட்சி தலைவருமான ரணில் விக்ரமசிங்கவுக்கு யாழ்ப்பாணத்தில் வைத்து, அரச பாதுகாப்புக்கு மேலதிகமாக புலிகள் நிழல் பாதுகாப்பு கொடுத்த சம்பவம் புலிகளுக்கும் ரணில் விக்ரமசிங்கவுக்கும் இடையே இருந்த உறவின் வெளிப்பாடாகவே உணர முடியும். நல்லாட்சி கால முட்டுக்கொடுப்பை போன்றதாக அல்லாது தமிழ் மக்களது அரசியல் தீர்வு விடயத்தின்பாற்பட்ட உண்மையான ஈடுபாட்டின் நிமித்தமான உறவுநிலையாகவே அது அமைந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

2005 முதல் வாரத்தில் இலங்கை பாதுகாப்பு பிரிவினரது பாதுகாப்பை கடந்து நிழல் பாதுகாப்பு

**இரா.மயூதரன்**

வழங்கி பாதுகாக்கப்பட வேண்டிய நபராக இருந்த ரணில் விக்ரமசிங்க அதே ஆண்டு இறுதிக்காலத்தில் நடைபெற்ற அரசு தலைவர் தேர்தலின் போது நிராகரிக்கப்பட வேண்டியவராக மாறியமைக்கு, புலிகளின் தலைமைதான் காரணம் என்றோ, குறித்த முடிவு வரலாற்று தவறானதென்றோ மேற்குறித்த சம்பவத்தின் ஊடாக கூறிவிட முடியாது. நம்பவைத்து ஏமாற்றியது யார்...? இருதரப்பு உரையாடல்களின் போது நடந்தவை என்ன...? உள்ளிட்ட விடயங்கள் அதனோடு நேரடியாக தொடர்புபட்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கே வெளிச்சம்.

**புலிகளின் கோரிக்கையை நிராகரித்த ரணில்**

இக்காலகட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் ரணில் விக்ரமசிங்கவிற்கும் இடையே ஜனாதிபதித் தேர்தல் விடயம் தொடர்பில் இருதரப்பு பேச்சுகளில் நேரடியாக ஈடுபட்டிருந்த அப்போதைய த.தே.கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் இது விடயம் தொடர்பில் நன்கறிந்தவராவார்.

"ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர், விடுதலைப் புலிகளால் 2003 ஆம் ஆண்டு ஒக்டோபர் 31 ஆம் திகதி நோர்வே சமாதான தூதர் எரிக் சொல்ஹெய்மிடம் வழங்கப்பட்டிருந்த இடைக்கால தன்னாட்சி அதிகார தீர்வுத்திட்டத்தை அடிப்படையாக கொண்டு பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது தொடர்பான வாக்குறுதியினை நோர்வே ஊடாக ரணில் விக்ரமசிங்க வழங்குவாராக இருந்தால் தேர்தல் புறக்கணிப்பு தீர்மானத்தை கைவிட தயாராக உள்ளோம்" என்ற புலிகளின் கோரிக்கையை அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் ஊடாக பெற்றுக் கொண்டு ரணில் விக்ரமசிங்க தரப்பிடம் எடுத்துச் சென்றிருந்தாக எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் குறித்த கோரிக்கை ரணில் விக்ரமசிங்கவின் பார்வைக்கு கொண்டு சேர்க்கப் பட்டிருந்ததை பின்நாட்களில் உறுதிப்படுத்திக் கொண்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அது மாத்திரமல்லாது, 2005 தேர்தலில் தோல்வியுற்ற நிலையில் நாடாளுமன்ற அரங்கில் எதிர்க்கட்சி தலைவராக ரணில் விக்ரம சிங்க அமர்ந்திருந்த சந்தர்ப்பத்தில் மேற்குறித்த நிலையினை உறுதி செய்திருந்ததாகவும், "தமது கட்சியின் தவிசாளர் மலிக் விக்ரம போன்றவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டாம் என தெரிவித்திருந்த காரணத்தினால் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் குறித்த முடிவு தொடர்பில் தற்போது கவலைப்படுகிறேன். ஒரு லட்சத்து 75 ஆயிரம் வாக்குகளால் தோற்ற பின்னர் அதனை ஏற்றுக்கொண்டிருக்கலாம் என நினைத்தேன்." என்று தன்னிடம் நேரில் வருத்தத்து டன் அப்போது தெரிவித்திருந்ததாக எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

நிலமை இவ்வாறு இருக்கையில், உண்மைகள் ஆழப்புதைக்கப்பட்டு 2005 தேர்தல் புறக்கணிப்பு தீர்மானம் குறித்த பழி சுமத்தல்களுடன் எம்.ஏ.சுமந்திரன் வகையறாக்கள் கடந்து செல்ல முற்படுவதானது ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்கவை ஆதரிப்பது என்ற ஒற்றைக் காரணத்தை கடந்து நியாயப்படுத்த ஏற்புடையதான வேறு காரணங்களற்ற வறிதான நிலையின் வெளிப்பாடேயாகும்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பாக, போர் முடிவுக்கு வந்த கையோடு 2010 அரசுத் தலைவர் தேர்தலில், இறுதிப் போரை தலைமை தாங்கிய இராணுவத் தளபதி பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவை ஆதரித்து நின்றமைக்கும், 2015 முதல் 2019 வரையான நல்லாட்சி காலத்து முட்டுக்கொடுப்புக்கும், 2019 அரசுத் தலைவர் தேர்தலில் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவாக செயற்பட்டமைக்கும், 2022 ஆம் ஆண்டு டலஸ் அழகப்பெருமவுடன் உடன்படிக்கை வரை சென்றமைக்கும் இன்றுவரை யாரும் பொறுப்புக் கூறவில்லையே.

மேற்குறித்த தருணங்களில் எல்லாம் பெருந்தலைவர் சம்பந்தன் அவர்களோ அல்லது எம்.ஏ.சுமந்திரன் அவர்களோ அவர்தம் தனிப்பட்ட அரசியல் பலத்தில் நின்று இந்த முடிவுகளை எடுத்திராது தமிழ் மக்கள் வழங்கிய ஏகபிரதிநிதித்துவத்தின் ஊடாகவே தீர்மானங்களை மேற்கொண்டு செயற்பட்டிருந்தனர். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தமிழர்களுக்கான அரசியல் தீர்வை முன்னிறுத்தியதாகவே ஆதரவு நிலை நியாயப்படுத்தப்பட்டு வந்திருந்தது.

குறித்த முயற்சிகள் தெற்கிலங்கை இனவாத சக்திகளினால் குழப்பியடிக்கப்பட்டதாக இவர்கள் தப்பித்துவிட முடியாது. நல்லாட்சி அரசாங்கத்தின் தாங்கு தூணாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு திகழ்ந்த சுமார் நான்கரை ஆண்டுகளில் வாக்குறுதிகளை நிறைவேற்ற எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? தமிழர்களுக்கு நியாயமான அரசியல் தீர்வினை காண்பதற்கு சிங்கள பெருந்தேசியவாதம் என்றுமே தயாராக இல்லை என்ற உண்மையை இன்றுவரை மூடிமறைத்து காலத்துக்கு காலம் தம்சார்ந்தவர்களை மீட்பர்களாக தமிழர்களிடம் முன்னிலைப்படுத்தி வருவதானது அரசியல் அயோக்கியத்தனமன்றி வேறென்ன?

ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டதன் பின்னரான கடந்த 15 ஆண்டுகாலத்தில் வட கிழக்கு

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# நில அபகரிப்பை தடுப்பதற்கு எந்த ஒரு அமைப்பாலும் முடியாது



**ஒற்றை ஆட்சி கட்டமைப்பின் கீழ் இருந்து கொண்டு வடகிழக்கில் இருக்கின்ற நில அபகரிப்பை தடுப்பதற்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணி மாத்திரம் அல்ல எந்த ஒரு அமைப்பாலும் முடியாது ஆகவே இந்த ஒற்றை ஆட்சி முறைமை நிராகரிக்கப்பட்டு சமஸ்டி கட்டமைப்பு உருவாக்கப்படும் வரை நம்முடைய ஜனாதிபதி தேர்தலாக இருந்தாலும் சரி எதுவாக இருந்தாலும் சரி பகிஸ்கரிக்க வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலைக்கு மக்கள் அந்த முடிவை எடுக்க வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கின்றார்கள் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்தார்.**

**இலக்கு வார இதழுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இதனை தெரிவித்தார்.இதன்போது அவர் வழங்கிய பேட்டியின் விபரம்.**

**இறுதிப் பகுதி**

**அப்போது தேர்தல் பகிஸ்கரிப்பு முடிவினை ஏன் எடுத்தீர்கள் இதில் எதனை சாதிக்கலாம் என நினைக்கின்றீர்கள்?**

உண்மையில் இலங்கை அரசினுடைய அரசியல் அரச இயந்திரத்தை தமிழ் மக்கள் ஒருபோதும் நம்பவில்லை என்றும் தமிழ் மக்களுக்கு இதன் மூலம் அதாவது தொடர்ந்தும் அடக்குமுறை காணப்படுகின்றது தொடர்ந்து அநியாயங்கள் காணப்படுகின்றது தமிழ் மக்களினுடைய சொத்துக்கள் அபகரிக்கப்படுகின்றது காணிகள் அபகரிக்கப்படுகின்றது.

தமிழ் மக்களின் கலாச்சாரங்கள் குறிவைக்கப்படுகின்றது தமிழ் இளைஞர் யுவதிகள் கட்டமைப்பு சார் இன அழைப்பிற்கு உட்படுத்தும் விதமாக போதைவஸ்து பாவனைக்கு உட்படுத்தி தமிழ் மக்களை அழிக்கின்ற செயற்பாடுகள் நடந்து வருகின்றது.

அப்படிப்பட்ட உயர்ந்த அடக்குமுறை இருந்தும் கூட நாங்கள் ஒரு தீர்க்கமான தமிழ் மக்கள் உரிமை சார்ந்த ஒரு உறுதியான நிலைப்பாட்டில் இருக்கின்றோம் என்பதனை இந்த பகிஷ்கரிப்பின் ஊடாக தெளிவுபடுத்தவேண்டும்.

அப்படிப்பட்ட உயர்ந்த அடக்குமுறை இருந்தும் கூட நாங்கள் ஒரு தீர்க்கமான தமிழ் மக்கள் உரிமை சார்ந்த ஒரு உறுதியான நிலைப்பாட்டில் இருக்கின்றோம் என்பதனை இந்த பகிஷ்கரிப்பின் ஊடாக தெட்டத் தெளிவாக வெளிப்படுத்த விரும்பு கின்றோம்.இன்று நாடு 75 வருடம் தொடர்ச்சியாக எங்களுக்கு எதிராக அதாவது தமிழ் மக்களுக்கு எதிராக தொடர்ச்சியாக சிங்கள பேரினவாதம் அடக்கு முறையை மேற்கொண்டு வருகின்றது இந்த அடக்குமுறை மூலம் நாங்கள் ஒருபோதும் அடிபணிய மாட்டோம் நாங்கள் இறுதிவரை எந்த நடவடிக்கை எடுத்தாலும் நாங்கள் மண்டியிட மாட்டோம் என்பதனை இந்த தேர்தல் வாயிலாக கூறப்போகின்றோம்.

இதேவேளை சர்வதேச சில நாடுகளாக இருந்தாலும் சரி, இலங்கை அரசாக இருந்தாலும் சரி இந்த நாட்டை கட்டி எழுப்ப வேண்டும் அல்லது சிங்கப்பூராக மாற்ற வேண்டுமாக இருந்தால் இரண்டு முடிவுகளை நாங்கள் எடுக்க வேண்டும் ஒன்று இலங்கை அரசு எடுக்கின்ற முடிவு தமிழ் மக்கள் உரிமை கோரிக்கைகளை கைவிட பண்ணி அவர்களை வற்புறுத்தி ஒரு அடிமையாக வாழ வைக்கின்ற நிலைப்பாட்டினை அரசு எடுக்க வேண்டும் அல்லது இரண்டாவது விடயமாக தமிழ் மக்களது உரிமையை அங்கீகரித்து அந்த தலைமைத்துவத்தை வலுப்படுத்தி தமிழ் மக்களுக்கான சுய நிர்ணய உரிமையை பெற்றுக் கொடுக்கும் விதத்தினை கையாள வேண்டும்.

**தமிழ் தேசிய கொள்கையுடன் பயணிக்கின்ற ஒரு கட்சி இன்று வடகிழக்கில் தமிழ் தேசிய கொள்கையுடன் பயணிக்கும் ஏனைய கட்சிகளையும் ஒன்றிணைக்க இதுவரையில் ஏதேனும் நடவடிக்கைகள் எடுத்து உள்ளீர்களா அல்லது எதிர்காலத்தில் இவ்வாறான நடவடிக் கைகளை முன்னெடுக்க ஏதேனும் திட்டங்கள் உள்ளதா?**

வடக்கு கிழக்கில் தமிழ் தேசியம் பேசுகின்ற அல்லது நாங்கள் பெரிய தமிழ் தேசியவாதிகள் என்று சொல்கின்றவர்கள் பக்கம் தங்களுடைய கடந்த கால தவறுகளை தாங்கள் என்னென்ன விடயங்களை அதாவது துரோகங்களை செய்து இருக்கின்றார்கள் தமிழ் மக்களுக்கு என்கின்ற விடயத்தை சுட்டிக்காட்டி விட்டு தமிழ் தேசிய முன்னணி உடன் பேச வரலாம் அதில் மாற்றுக் கருத்து இல்லை.

அவர்கள் கடந்த காலங்களில் நடந்த தவறுகளை ஊடகங்கள் வாயிலாக மக்களுக்கு அம்பலப்படுத்தி விட்டு வந்தால் நாங்கள் அதை தொடர்பாக பரிசீலனை செய்யலாம்.

**கிழக்கைப் பொறுத்தளவில் கடந்த காலங்களில் தமிழ் தேசியத்திற்கு அளித்த வாக்குகளை விட அரசாங்கத்திற்கு சார்ந்து நின்றவர்களுக்கு அல்லது அரசாங்கத்தோடு சேர்ந்து இருந்து தமிழ் மக்களுக்கு எதிரான பல்வேறு விடயங்களை செய்தவர்களுக்கு தான் அதிகமாக வாக்களித்து இருக்கின்றார்கள் பெரும்பாலும் இந்த நிலை எதிர்காலத்திலும் அதிகரிக்க கூடும் என நினைக்கின்றீர்களா அல்லது மீண்டும் தமிழ் தேசியம் சார்ந்து செயல்படுகின்ற கட்சிகளுக்கு தமிழ் மக்கள் ஆதரவளிப்பார்கள் என்று நினைக்கின்றீர்களா?**



யுத்தம் முடிந்த கையுடன் இன்று நிலைமைகளை பார்த்தீர்கள் என்றால் தெரியும் வடக்குக் கிழக்கில் தமிழர்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். மிகவும் சிக்கலான அன்றாட வாழ்க்கையை கொண்டு நடத்துவதிலே மிகவும் சிரமப்படுகின்றார்கள் அந்த அடிப்படையில் அரசினுடைய நீண்ட காலத்திட்டம் தமிழர்களை இவ்வாறான ஒரு நிலைப்பாட்டுக்குள் தள்ளி அவர்களை தன்வயப்படுத்தி தாங்கள் தங்களோடு சேர்ந்து ஓடுகின்ற நிகழ்ச்சியோடு சேர்த்துக் கொண்டு செல்வதற்காக தான் அவர்கள் நீண்டகால திட்டமாக இதனை வைத்து செய்து வருகின்றார்கள்.

அந்த அடிப்படையில் அவர்கள் சலுகைகளை கொடுத்து சில சலுகைகளை தங்களது பிரதிநிதிகளுக்கு கொடுத்து வறுமையில் வாடி இருக்கின்ற மக்களுக்கு சலுகைகளை வழங்கி உதவிகளை செய்வது போன்ற தோற்றப் பாடுகளை காட்டி அவர்களுடைய வாக்குகளை பெற்றதுதான் கடந்த காலங்களில் நடந்து வந்த விடயமாக இருக்கின்றது.

உண்மையில் எமது மக்களை வறுமை நிலைக்குள் தொடர்ச்சியாக வைத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் அரசினுடைய திட்டமாக காணப்பட்டது அதேபோன்றுதான் இந்த எதிர்வரும் காலங்களில் அவ்வாறான முடிவுகளை எடுப்பதற்காக அவர்கள் செயல்படுவார்கள் ஆனால் இன்று மக்கள் மிக விழிப்படைந்து இருக்கின்றார்கள் இந்த மண்ணிலே தமிழ் மக்களுக்கு எதுவிதமான உரிமைகள் இல்லை என்பதனை இந்த அரசினுடைய அதீத அடக்கு முறை ஆக்கிரமிப்புகள் புடம் போட்டு காட்டு கின்றது.

ஆகவே நான் நினைக்கின்றேன் தமிழர்கள் கிழக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியத்திற்கு பின்னாலே முழுமையாக நிற்பார்கள் என்பதுதான் என்னுடைய நிலைப்பாடு ஏனென்றால் பேசுபவர்கள் எல்லாம் இங்கு இருக்கின்ற அரசின் பிரதிநிதிகளாக இருக்கின்றவர்களுக்கு மிக மோசமாக திட்டுவதை காணக் கூடியதாக இருக்கின்றது.

நாங்கள் கிராமங்கள் தோறும் செல்லுகின்ற போது மக்கள் தங்களுடைய கவலையை தெரிவிக்கின்றார்கள். சென்றவர்களிடம் தவறுகளாக எங்கள் குடும்ப தலைவர்கள் சாராயத்திற்கும் பிரியாணிக்கும் ஆசைப்பட்டு வாக்குகளை கொடுத்துவிட்டார்கள் என்கின்ற ஒரு நிலைப் பாட்டை அவர்கள் கூறுகின்றார்கள்.

தவறுதல்களாக நடந்த சம்பவம் ஆகவே இனிமேல் உங்களுக்கு பின்னால்தான் நாங்கள் நிற்போம் தமிழ் தேசியத்திற்கு பின்னால் தான் நிற்போம் என்கின்ற விடயத்தை அந்த மக்கள் தெரியப்படுத்துகின்றார்கள்.

ஆகவே தமிழர்கள் எடுக்கின்ற முடிவுகளுக்கு அனைவரும் சிங்கள நிகழ்ச்சி நிரலுக்குள் அகப்பட்டு விட்டு ஆசாபாசங்களுக்குள் சென்று வசதி வாய்ப்புகளுக்கு சென்று சொகுசு வாழ்க் கைக்குள் சென்று தங்களுடைய எதிர்கால சந்ததியினுடைய எதிர்காலத்தை தொலைத்து விடக்கூடாது என்பதனை உரிமையுடன் இந்த ஊடகம் வாயிலாக கேட்டுக் கொள்கின்றேன்.

இங்கே குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்திலே பாலும் தேனும் ஓடுவதாக தான் இங்கு இருக்கின்ற இராஜீக அமைச்சர்கள் கூறிக் கொண்டிருக்கின்றார்கள் ஆனால் அயல் வீட்டில் உண்பதற்கு உணவில்லாமல் சபிக்கின்ற நிலை காணப்படுகின்றது.

ஆகவே அவர்களுக்கு எடுபிடிகளாக நிற் கின்றவர்கள் அவர்களுடைய ஒப்பந்தக்காரரர்கள்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# கிழக்கில் மீண்டும் தமிழ்–முஸ்லீம் கலவரத்தை ஏற்படுத்த முயற்சி

மட்டு.நகரான்

கிழக்குமாகாணத்தின்அம்பாறைமாவட்டத்தில் அண்மைக்காலமாக தமிழ்-முஸ்லிம் மக்களிடையே ஒரு வகையான பதற்ற நிலைமை ஏற்பட்டுள்ளதை காணமுடிகின்றது.அம்பாறை மாவட்டத்தில் இரு இனங்களுக்கிடையே முறுகல் நிலையானது திட்டமிட்ட வகையில் ஏற்படுத்தப்படுகின்றதா என்ற சந்தேகங்கள் ஏற்பட்டுவருவதை காணமுடிகின்றது.



குறிப்பாகஅம்பாறைமாவட்டத்தில்தமிழர்கள் தொடர்ச்சியான பாதிப்புகளை எதிர்கொண்டுவரும் நிலையில் அதனை பயன்படுத்தி இனங்களிடையே முறுகல் நிலைமைகளை ஏற்படுத்தி தமது அரசியல் இருப்பினை தக்கவைப்பதற்கான முயற்சிகளை பெரும்பான்மையின கட்சிகளும் ஒட்டுக்குழுக்களும் முயற்சிகளை முன்னெடுத்து வருவதை காணமுடிகின்றது.

கிழக்கின் இவ்வாறான நிலைமைகள் கடந்த காலத்தில் பல்வேறு தடவைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளமை குறித்து கடந்தகால எனது பத்தியில் பல்வேறு தடவைகள் எழுதியிருந்தேன்.அவ்வாறான நிலைமைகள் மீண்டும் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் குறித்தும் எழுதியிருந்தேன்.நான் அன்று குறிப்பிட்ட பல விடயங்கள் இன்று மேல் எழுவதை காணமுடிகின்றது.

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரம்,வீரமுனை வாயில் கோபுரம் அமைக்கு நடவடிக்கைகள் என்பவற்றினை சிலர் இன்று தமது அரசியல் இருப்பினை தக்கவைப்பதற்காக பயன்படுத்தி தமிழ்-முஸ்லிம் மக்களிடையே பிளவுகளை ஏற்படுத்தி வன்முறைகளை ஏற்படுத்துவதற்கான முஸ்தீபுகளை முன்னெடுத்துவருவதை காணமுடிகின்றது.



அண்மையில் அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீரமுனை கிராமத்தில் அந்த கிராமத்திற்கான நுழைவாயில் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நடைபெறவிருந்த நிலையில் அங்கு குழப்பங்கள் ஏற்பட்டு இரு சமூகங்களிடையே கைகலப்புகள் ஏற்படுமளவுக்கு நிலைமை சென்றிருந்தது.

வீரமுனை கிராமம் என்பது பழம்பெரும் தமிழ் கிராமம் ஆகும். சோழ இளவரசியான சீர்பாததேவி என்னும் இளவரசியினால் உருவாக்கப்பட்ட கிராமம் என்பதுடன்தனிதமிழ்கிராமமாக இருந்துவருகின்றது. ஒரு காலத்தில் சம்மாந்துறை பிரதேசமும் தமிழ் கிராமமாகவேயிருந்த நிலையில் பாரசீக வியாபாரிகளின் வருகையும் தமிழர்களுடனான கலப்பும் அங்கு இஸ்லாமிய இனம் தோற்றம்பெற்றதாக வரலாறுகள் கூறுகின்றன. எவ்வாறாயினும் இரு இனங்களும் இங்கு பிட்டும் தேங்காய்ப்பூவும் போலவே வாழும் நிலையிருந்தாலும் 1956ஆம் ஆண்டுக்கு பின்னர் சிங்கள பேரினவாதத்தின் பிரித்தாளும் தந்திரோபாயத்தின் கீழ் இரு இனங்களிடையே மோதல் நிலைமைகள் ஏற்படுத்தப்பட்டு அது நீறுபூத்த நெருப்பாக இருந்துவருகின்றது.

கடந்த காலத்தில் வீரமுனை என்னும் கிராமத்தினையும் அதனை அண்டியுள்ள தமிழ் கிராமங்கள் மீதும் இராணுவம் மற்றும் முஸ்லிம் ஊர்காவல் படையினர் இணைந்து பல்வேறு படுகொலைகளை நடாத்தி தமிழ் இனத்தை கறுவறுக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டும் தமிழர்கள் அங்கிருந்து விரட்டப்பட்ட நிலையிலும் மீண்டும் அங்கு குடியேறிய தமிழ் மக்கள் கடந்தகால கசப்புகளை மறந்து இரு இனங்களும் ஒற்றுமையாக வாழும் நிலையிருந்துவந்தது.அதிலும் வீரமுனை அதனை அண்டிய பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் தாங்கள் பாதிக்கப்பட்டிருந்தாலும் அவற்றினை மறந்து இஸ்லாமிய மக்களுடன் ஒன்றாக வாழும் நிலைமையினை ஏற்படுத்தியிருந்தனர்.

எனினும் அப்பகுதியில் உள்ள பெரும்பான்மையினைக்கொண்ட இஸ்லாமிய அரசியல்வாதிகள் தொடர்ச்சியாக இப்பகுதி தமிழர்களை புறக்கணிக்கும் செயற்பாடுகளையே முன்னெடுத்துவருகின்றனர்.இதன் காரணமாக இரு இனங்கிடையே சந்தேகங்கள் அதிகரித்துவரும் நிலையில் அதனை சாதகமாக பயன்படுத்துவதற்கு சிலர் முற்படும் நிலைமையே காணப்படுகின்றது.




வீரமுனையில் நுழைவாயில் வரவேற்பு வளைவு அமைக்கும் விடயமானது எந்த இனத்திற்கும் எதிரான ஒரு செயற்பாடு அல்ல.அது அந்த கிராமத்து மக்களின் உரிமையாகும்.அதனை இன்னுமொரு இனம் அதுவும் அந்த கிராமத்துடன் தொடர்புபடாத இனம் தடுக்கமுனைவது என்பது வீரமுனை மக்களின் அடிப்படையை மீறும் செயற்பாடாகவே பார்க்கப்படவேண்டும்.

அந்த பிரச்சினையை தீர்க்கவேண்டிய பொறுப்பு இஸ்லாமிய மக்கள் மத்தியில் உள்ள கல்விமான்களினதும் மதப்பெரியார்களினதும் தார்மீக கடமையாகும்.அதனை தீர்க்கமுடியாத நிலைமைகளே அண்மையில் ஏற்பட்ட சம்பவமாகும்.

குறிப்பாக பிள்ளையான் தலைமையிலான ரி.எம்.வி.பி. கட்சியானது கிழக்கு மாகாணத்தில் இனவாதத்தினை மையமாக கொண்ட செயற்பாடுகளையே முன்னெடுத்துவருகின்றது.அதாவது இந்த நாட்டில் உள்ள பெரும்பான்மை இனவாத சக்திகள் கிழக்கில் கிழக்கில் இனவாத முறுகலை ஏற்படுத்தி இனங்களிடையே வன்முறைகள், கலவரங்களை ஏற்படுத்தி அதன் மூலம் தமது திட்டமிட்ட செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான வழிகளை மேற்கொண்டுவருகின்றது.

அதாவது கிழக்கில் தமிழ்-முஸ்லிம் மக்களிடையே மோதல்களை ஏற்படுத்தி அவர்களிடையே பதற்ற நிலைமைகளை ஏற்படுத்திவிட்டு தமது திட்டமிட்ட குடியேற்றங்கள் காணி அபகரிப்புகளை முன்னெடுத்துவருகின்ற நிலைமையினை 1956ஆம் ஆண்டு தொடக்கம் முன்னெடுத்துவருகின்றனர்.

இதன்காரணமாகவே கிழக்கின் அம்பாறை மாவட்டம்மற்றும்திருகோணமலைமாவட்டங்கள் சிங்கள மயப்படுத்தப்பட்டன.மீண்டும் கிழக்கில் இவ்வாறான நிலைமைகளை ஏற்படுத்தி தமது செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி போன்ற கட்சிகளையும் முஸ்லிம்கள் பக்கம் உள்ள அதாவுல்லா போன்றவர்களையும் பேரினவாத அரசுகள் பயன்படுத்திவருகின்றது. இதன்காரணமாகவே இருவருக்கும் கிழக்கில் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் வீரமுனையில் வளைவினை அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டபோது அங்கு பிள்ளையான் விஜயம் செய்தபோது அதாவுல்லாவின் ஆதரவாளர்களும் அங்குவந்து பிரச்சினைகளை ஏற்படுத்தியிருக்கின்றனர்.ஏற்கனவே பிள்ளையான் அதாவுல்லாவுடன் சிறந்த முறையிலான தொடர்புகளை பேணிவரும் நிலையில் இவ்வாறான சம்பவங்களை இருதரப்பும் இணைந்து சூமூகமாக முன்னெடுத்திருக்கமுடியும்.மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவராகயிருக்கின்ற பிள்ளையான் சாணக்கியனுக்கு ஒதுக்கப்பட்ட 10மில்லியன் ரூபா ஒதுக்கீட்டை அதாவுல்லாவுக்கு பறித்து வழங்கியதாக அண்மையில் சாணக்கியன் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இவ்வாறான நிலைமையிலேயே பிரச்சினையை மட்டும் நோக்காக கொண்ட செயற்பாடுகளை உருவாக்குவதன் நோக்கம் காரணமாகவே அன்றைய குழப்ப நிலைமை ஏற்படுத்தப்பட்டது.அந்த பிரச்சினையானது திட்டமிட்ட ஒன்றாகவே நோக்கப்படவேண்டும்.

தற்போது ஜனாதிபதி தேர்தல், பாராளுமன்ற தேர்தல்,மாகாணசபை தேர்தல்கள் நடைபெறலாம் என்று கருத்துகள் வெளிவரும் நிலையில் இதுவரை மட்டக்களப்பு மாவட்டத்தில் தமது செயற்பாடுகளை முன்னெடுத்த பிள்ளையான் கட்சியினர் இன்று அம்பாறை மாவட்டத்தில் தமது அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளனர். முன்னதாக பிள்ளையான் எழுதிய ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான நூலும் அம்பாறையில் வெளியிடப்பட்டதை தொடர்ந்து அரசியல்செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் இனவாத ரீதியான அரசியல்செயற்பாடுகள் மட்டுமே முன்னெடுக்கப்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இரு இஞ்சிக்காணிகளைக்கூட மாற்று இனத்தவர்களிடமிருந்து மீட்கமுடியாத இந்த கிழக்கு மீட்பு பிள்ளையான் குழுவினர் இன்று அம்பாறை மாவட்டத்திற்கு சென்றுள்ளமையானது வெறும் இனவாத நோக்கம் மட்டுமேயாகும்.

பிள்ளையானின் கட்சி செயலாளரான

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# ஏட்டுச் சுரைக்காய்

துரைசாமி நடராஜா

இலங்கையில், பெருந்தோட்டத் தொழிற்றுறையின் நெருக்கீடுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. அத்தோடு தொழில் உரிமைகள் பலவும் மீறப்பட்டு வரும் நிலையில் தொழிலாளர்கள் பல்வேறு கெடுபிடிகளுக்கும் முகம் கொடுக்க வேண்டிய நிலையும் மேலெழுந்துள்ளது. இந்நிலையில் தொழிற்சட்டங்களின் வலுவிழந்த போக்கினையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதன் காரணமாக தோட்டங்களினதும் தொழிலாளர்களினதும் இருப்பும், எதிர்காலமும் கேள்விக்குறியாகி வருகின்றது.



இலங்கையின் பெருந்தோட்டங்களில் வேலை செய்யவந்த இந்திய தமிழர்கள் ஆரம்ப காலந் தொட்டே பல்வேறு பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்து வந்தனர். இவற்றுள் சம்பளம், வீட்டு வசதிகள், சுகாதாரம், கல்வி, தொழில் வாய்ப்பு, சமூக அந்தஸ்து போன்ற துறைகள் குறிப்பிடத்தக்கனவாக விளங்குகின்றன. எனினும் அவர்கள் இலங்கையில் வந்து குடியேறி ஒரு நூற்றாண்டு காலம் வரை தொழிற்சங்க ரீதியில் ஒன்றிணைந்து தமது நலவுரிமைகளுக்காக பாடுபட முடியாது போயிருந்தது.

நாட்டின் முக்கியமான பொருளாதார நடவடிக்கைகள் பெருந்தோட்டங்களிலேயே இடம் பெற்ற போதிலும் தொழிற்சங்க இயக் கங்கள் தோட்டங்களில் தாமதமாகவே வளர்ச்சியுற்றன. இருபதாம் நூற்றாண்டில் நகர்ப்புறங்களில் எழுந்த தொழிற்சங்க இயக்கம் நகர தொழிலாளர்களையும் தோட்டத் தொழிலாளர்களையும் கூட்டாக இயக்கும் முயற்சிகளிலோ அல்லது பெருந்தோட்டப் பகுதிகளுக்கு இயக்கத்தைவிரிவுசெய்யும்நடவடிக்கைகளிலோ ஈடுபடவில்லை.



1930ம் ஆண்டளவில் இந்தியத் தொழிலாளர்கள் இலங்கையில் நிரந்தரமாக வேரூன்றிய போதிலும் நகர்ப்புறத்தில் வளர்ச்சியுற்ற தொழிற்சங்கங்களின் தலைவர்கள் அவர்களை அந்நியர்களாகவே கருதினர். கொழும்பு போன்ற நகர்ப்புறங்களில் வேலை நிறுத்தங்கள் நடைபெற்றபோது தோட்ட உரிமையாளர்கள் தமது தொழிலாளர்கள் நகரங்களுடன் தொடர்பு கொள்ளாதவாறு தடை செய்தனர். அவ்வேலை நிறுத்தங்கள் தோட்டங்களுக்கு பரவுவதை தவிர்க்கவே அவ்வாறு செய்தனர்.

1920 களில் நகரத் தொழிலாளர் மத்தியில் குழப்பநிலை காணப்பட்டபோது தோட்டத் தொழிலாளர்களுக்கென்று போராடுவதற்கு தொழிற்சங்கங்களோ அல்லது வேறு பொதுநல சங்கங்களோ உருவாகியிருக்கவில்லை என்று பேராசிரியர் சோ.சந்திரசேகரன் சுட்டிக் காட்டியுள்ளார். இந்நிலையில் பல்வேறு சவால்களுக்கும் மத்தியிலேயே தொழிற்சங்கங்கள் தோட்டங்களில் உட்புகமுடிந்தது. தொழிலாளர்களின் உரிமைகள் பலவும் மறுக்கப் படுவதற்கும், மழுங்கடிக்கப் படுவதற்கும் தொழிற்சங்கங்கள் இல்லாத நிலைமையும் ஆரம்ப காலத்தில் வலுசேர்த்தது என்பதையும் மறுப்பதற்கில்லை.

### கட்டளைச் சட்டங்கள்

இலங்கையில் கோப்பிப் பயிர்ச்செய்கைக்கு ஆரம்பத்தில் தென்னிந்தியாவில் இருந்து சிறியளவில் தொழிலாளர்கள் அழைத்துவரப் பட்டார்கள். பின்னர் படிப்படியாக தேயிலை உற்பத்தி வேரூன்றிய நிலையில் 1890 இல் 22.898 தொன் தேயிலை உற்பத்தி செய்யப்பட்டது. தேயிலைத் தொழிற்றுறைக்கு இந்தியாவிலிருந்து அதிகமான தொழிலாளர்களை அழைத்துவர வேண்டிய நிலைமை மேலோங்கியது.

இவ்வாறாக இந்தியாவிலிருந்து தொழிலாளர்களை அழைத்து வருவதற்கும் அவர்களின் நலன்களை நோக்கமாகக் கொண்டும் ஆட்சியாளர்களினால் பல்வேறு கட்டளைச் சட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டன. பிரித்தானியர் காலனித்துவ ஆதிக்க யுகத்திலேயே, இலங்கையில் தொழிலாளர் சட்டத்துறையில் அத்திவாரம் அமைக்கப்பட்டதாக குறிப்பிடப்படுகின்றது.

இந்தவகையில் 1841 ம் ஆண்டு 5 ம் இலக்கம் கொண்ட ‘ கூலி மற்றும் சேவைகள் ஒப்பந்த கட்டளைச் சட்டம் ‘ (Contracts for Hire and Service Ordinance No.5 of 1841) முதலாவது கட்டளைச் சட்டமாக பெயர் பெற்றுள்ளது. இந்த கட்டளைச் சட்டத்தின் கீழ் ‘கங்காணிமார்கள்’ என்று அறிமுகப்படுத்தப்பட்ட தோட்டத் தொழிலாளர்களைவழங்கும்முகவர்கள்மூலமாக வெள்ளை இன தோட்ட உரிமையாளர்களுக்கு அல்லது துரைமார்களுக்கு இந்தியாவிலிருந்து தொழிலாளர்களை கொண்டு வர முடிந்தது. இதைத்தொடர்ந்து தொழிலாளர்களின் நலன்களுக்கு வலுசேர்க்கும் வகையில் சட்டங்கள் பலவும் உருவாக்கப்பட்டன.

1935 இன் 14 ஆம் இலக்க தொழிற்சங்கங்களின் கட்டளைச் சட்டம், 1941 இன் 27 ம் இலக்க சம்பள சபையின் கட்டளைச் சட்டம், 1950 இன் 43 ம் இலக்க கைத்தொழில் பிணக்குச் சட்டம்,1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டம், 1980 இன் 46 ம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டம், 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை செலுத்தும் சட்டம் என்பன முக்கியத்துவம் மிக்கனவாக விளங்குகின்றன.

ஊழியர் சேமலாப நிதியத்திற்கு உரிய முறையில் சந்தாப்பணத்தை செலுத்த வேண்டியது முழுமையாக தொழில் தருநரின் பொறுப்பாகும். அவ்வாறு உரிய முறையில் ஊழியர் சேமலாபத்தை செலுத்தாத தொழில் தருநர்களுக்கு எதிராக தொழில் திணைக் களத்தினால் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படும்.

மேலும் ஊழியர் சேமலாப நிதியக் கொடுப்பனவு முழுமையாக தொழில் தருநரின் பொறுப்பாக இருந்தபோதிலும் அது சரியாக செய்யப்படாவிட்டால் அது குறித்து தொழில் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வூட்ட வேண்டியது ஊழியருடைய பொறுப்பாகும் என்பதையும் நினைவில் இருத்திக் கொள்ளுதல் வேண்டும். ஊழியர் சேமலாப நிதியத்தின் நன்மைகளைப் பெற்றுக் கொள்வதில் உள்ள சிரமங்களை நீக்குவதற்காக ‘ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டம்’ 1980 இல் அறிமுகம் செய்யப்பட்டது. ஓய்வூதிய நிதியத்திற்கு உரிமை கோரும் அரசாங்க மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களில் சேவையாற்றும் ஊழியர்களைத் தவிர ஏனைய சகல ஊழியர்களும் ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டத்தின் கீழ் உள்ளடக்கப்படுகின்றனர்.

### கொடுப்பனவுகள் இல்லை

இவ்வாறாக தொழிற்சட்டங்கள் பல காணப் படுகின்றபோதும் தொழிலாளர்களின் நலன்கள் மற்றும் உரிமைகள் நாளுக்கு நாள் பறிபோவதையே அவதானிக்கக் கூடியதாக உள்ளது. தொழிற்சட்டங்கள் ஏட்டுச் சுரைக்காயாகி வருகின்றன.



பெருந்தோட்டத் தொழிற்றுறையில் கம்பனிகளின் கை ஓங்கிய உள்ள நிலையில் அது பல்வேறு மட்டங்களிலும் எதிரொலிக்கின்றது. தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளத்தை பெற்றுக் கொடுப்பதில் கூட கம்பனிகளின் இழுபறி நிலைமை தொடர்ந்து கொண்டிருப்பதும் தெரிந்ததேயாகும். கம்பனியினரின் இலாபத்தை மையப்படுத்திய செயற்பாடுகள்தொழிலாளர்களினதும்தோட்டங்களினதும் நலன்களை கேள்விக்குறியாக்கி வருகின்றன. மேலும் தொழிலாளர்களை பலவித நெருக்கீடுகளுக்கும் கம்பனிகள் உள்ளாக்கி வருகின்றன.

‘வீடு என்பது தனியே வெயிலுக்கும் மழைக்குமான ஒதுங்கிடமல்ல. அது ஒரு சமூக நிறுவனமும் கூட. அங்கேதான் சமூக நாகரிகத்தின் அத்திவாரம் இடப்படுகின்றது. எனவே வீடு என்பது குறைந்தபட்ச தகுதிகளையாவது கொண்டிருக்க வேண்டும்’ என்பார்கள். ஆனால் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வீட்டு வசதியானது மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது. பெருந்தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட காலங்களில் தொழிலாளர்கள் தங்குவதற்காக தற்காலிக குடிசைகளே அமைக்கப் பட்டிருந்தன.

பின்னர் தேயிலைத் தொழில் விருத்தி பெற்றதையடுத்து 1927 ம் ஆண்டு முதல் 1945 ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கட்டப்பட்ட லயன் வீடுகளே இன்றும் காணப்படுகின்றன. இவற்றுள் பல இடிந்துவிழும் நிலையில் உள்ளன. எனினும் இந்த லயன் அறைகளை பழுது பார்ப்பதற்குக்கூட கம்பனிகள் முன் வராத நிலையில் அரசாங்கத்திடமும் தொழிலாளர் களின் வீடமைப்பு குறித்து அசமந்தப் போக்கே காணப்படுகின்றது. தோட்டப்புற மக்களின் சுகாதார வசதிகளும் பின்தங்கிய வெளிப்பாடுகளையே கொண்டுள்ளன. இவற்றையெல்லாம் கண்டு கொள்ளாத கம்பனிகள்

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்

# தமிழர் வள ஆலோசனை மையத்தில் யோகாசனப் பயிற்சியின் வரலாறு



நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவில் உள்ள றொம்மன் என்னும் இடத்தில் தமிழர் வள ஆலோசனை மையத்தினரின் முயற்சியால் 2002 ஆம் ஆண்டில் தமிழர்களுக்கான கட்டடம் கொள்வனவு செய்யப்பட்டது.

தமிழர்களுக்கான ஒரு நிரந்தரக் கட்டடம் இருப்பதால் பல திட்டங்களை வகுத்து அதனை நடைமுறைப்படுத்தும் சிந்தனைகள் தமிழர் வள ஆலோசனை மையத்தினரால் முன்னெடுக்கப்பட்டது. அச்சிந்தனைகளில் ஒன்றாக மூத்தோர் முற்றம் 2003 ஆம் ஆண்டில் உருவாக்கம் பெற்றது. ஒஸ்லோவும் அதைச் சுற்றியும் உள்ள நகரங்களில் வாழும் மூத்தோர்கள், பிரதி புதன்தோறும் தமக்கான ஓர் ஒன்றுகூடும் தளமாக ஆரம்பிக்கப்பட்டதே மூத்தோர் முற்றம் ஆகும்.



2004 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மூத்தோர்களுக்கான யோகாசனப் பயிற்சிகளை வழங்கக் கூடிய ஒரு யோகாசன ஆசிரியர் இனம் காணப்பட்டார். அவர் தான் திரு.ஆறுமுகம் பேரம்பலம் ஐயா அவர்கள். இவர் தமிழ்நாட்டில் புகழ் பூத்த யோகாசனபேராசிரியர்ஆசனாஇரா.ஆண்டியப்பன் அவர்களிடம் முறையாக யோகாசனப் பயிற்சிகள் பெற்று ஆசிரியராக தன்னை உயர்த்திக் கொண்டவர். அவரும் மூத்தோர்களுக்கு யோகாசனத்தை பயிற்றுவிக்க தனது ஆர்வத்தை வெளிப்படுத்தியிருந்தார். ஆரம்பித்ததில் இருந்தே மூத்தோர்கள் மத்தியில் யோகாசனப் பயிற்சிகள் மிகவும் பிரபல்யம் அடையத் தொடங்கியது. அக்காலத்தில் யோகாசனம் தொடர்பான பெரிதளவிலான பிரச்சாரங்கள் உலகம் பூராகவும் பரவத் தொடங்கியது. இதனால் யோகாசனத்தை முறையாகக் கற்க வேண்டும் என்ற ஆர்வம் பலருக்கு உதயமானது. எமது மக்களின் விருப்பத்தை கவனத்தில் கொண்ட தமிழர் வள ஆலோசனை மையத்தினர் அவர்களுக்கான பிரத்தியேக வகுப்புகளை பிறிதொரு நாளில் திரு.ஆறுமுகம் பேரம்பலம் ஆசிரியரால் ஆரம்பித்து வைத்தனர்.

வாரத்தில் இரண்டு நாட்கள் யோகாசனப் பயிற்சிகள் இடம்பெற்றிருந்தன. இக்காலப் பகுதியில் யோகாசனப் பயிற்சி ஆசிரியரான பேரம்பலம் ஐயா அவர்கள் தனது வகுப்புகளில் திறமையுடன் செயற்பட்ட இரண்டு நபர்களை தெரிவு செய்து தனக்கு பிற்பட்ட காலத்தில் அவர்களை ஆசிரியராக உருவாக்குவதற்கான சிறப்புப் பயிற்சிகளை மேற்கொண்டு இருந்தார். திருமதி.நாமகள் அவர்களும் திரு.றொபேட் ஜெயானந்தன் அவர்களும் தெரிவு செய்யப்பட்டு இருந்தனர். இவர்கள் இருவரும் யோகாசனம் மீது கொண்ட ஆர்வத்தாலும் அக்கறையாலும், தமது சொந்தச் செலவில் தமிழகத்திற்கு சென்று யோகாசனப் பயிற்சியை தமக்கு கற்றுத் தந்த ஆசிரியரான திரு.ஆறுமுகம் பேரம்பலம் ஐயா அவர்களின் வழிகாட்டியான யோகாசனப் பேராசிரியர் ஆசனா இரா.ஆண்டியப்பன் அவர்களிடம் சிறப்புப்பயிற்சியை பெற்றுதம்மை ஆசிரியர்களாக அடையாளப்படுத்திக் கொண்டனர்.



2007 ஆம் ஆண்டில் யோகாசன ஆசிரியரான திரு.ஆறுமுகம் பேரம்பலம் அவர்கள் அமரர் ஆனார். அவரது மறைவைத் தொடர்ந்து திருமதி. நாமகள் அவர்களும், திரு.றொபேட் ஜெயானந்தன் அவர்களும் ஆசிரியர்களாக யோகாசனப் பயிற்சிகளை தொடர்ந்தனர். சிறிது காலத்தின் பின்னர் திருமதி.நாமகள் அம்மா அவர்கள் முதுமை காரணமாக தன்னை விலக்கிக் கொண்டிருந்தார்.

மூத்தோர்களுக்கும், தனிப்பட்டவர்களுக்கும் இரண்டு பிரிவுகளாக நடைபெற்ற யோகாசனப் பயிற்சியில் பயன்பெற்ற பலர் இன்று யோகாசன ஆசிரியர்களாக தனிப்பட்ட முறையில் பலருக்கு யோகாசனத்தை முறையாகக் கற்றுக் கொடுத்து வருவது பெருமைக்குரியதே. இன்றும் பிரதி புதன்தோறும் தமிழர் வள ஆலோசனை மையத்தில் யோகாசனப் பயிற்சிகளால் பலர் பயன்பெற்று வருகின்றனர். குறிப்பாக தற்போது நடைபெறும் யோகாசன பயிற்சிகள் அனைத்தும் இலவசமாக வழங்கப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

**யோகாசனம் என்றால் என்ன?**

“நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்“ இதை நாம் அனைவரும் அறிவோம். ஆனால் அந்த நோயற்ற வாழ்வை பெறுவதற்கு நாம் சற்றேனும் சிந்திப்பதில்லை. வியாதி வந்து குணமடைவதைவிட, வியாதி வராமலேயே தடுப்பது மிகவும் உகந்தது. என்றும் நிலைபெற்ற சுகத்தைப் பற்றி நமது கவனத்தைச் செலுத்துவது மிகவும் நல்லது. வியாதி வராமல் தடுப்பதிலும், வந்த பின்னர் அறவே களைவதிலும் யோகாசனம் ஓர் உறுதியான உபாயமாகும்.

ஆரோக்கிய வாழ்விற்கு யோகாசனம் எவ்வளவு அவசியம் என்பதை இந்த உலகம் நன்கு உணர்ந்ததால் என்னவோ, இன்றைய நாள் ஜூன் மாதம் 21 ஆம் திகதி யோகாசனத் திற்கான ஒரு நாளாக உலகத் தரத்திற்கு உயர்த்தப்பட்டு வலைத்தளங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. இந்த அழகிய நாளில் நோர்வே வாழ் தமிழர்களின் யோகாசனப் பயிற்சி வரலாற்றுக் கட்டுரையை தங்கள் பார்வைக்குக் கொண்டுவருவதில் தமிழர் வள ஆலோசனை மையம் பெருமை கொள்கின்றது.

நீங்களும் தற்போது நடைபெறும் இலவச யோகாசனப் பயிற்சிகளில் சேர்ந்து ஆரோக்கிய வாழ்வைப் பெற்றுப் பயனடைய எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

தமிழர் வள ஆலோசனை மையம்
நோர்வே

• • •

## பிரான்சில் இடம் ... தொடர்ச்சி ...

புகழுடலுக்கு தமிழீழ தேசியக்கொடி போர்த்தப்பட்டு மதிப்பளிக்கப்பட்டது.மாலை 15.00 மணிக்கு புகழுடலானது *Cimetiére Parisien de Pantin 164 Av. Jean jaurés 93500 Pantin* என்னும் முகவரியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

## ரணிலுக்கு ... தொடர்ச்சி ...

என்று கூறியிருக்கிறார். அதேவேளையில் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணி, முஸ்லிம் காங்கிரஸ் என்பனவும் சஜித் அணியில்தான் உள்ளன. இதனால், சிறுபான்மையினரின் வாக்குகளையும் முழுமையாக நம்பலாமா என்ற கேள்வி ரணிலுக்கு இருக்கின்றது.

இந்த நிலையில் மோடி தன்னை மறை முகமாக ஆதரித்து 13 தொடர்பில் பேசினால், தமிழ்க் கட்சிகளின் ஆதரவைப் பெற்றுக்கொள்வது சிரமமாக இருக்காது என்பது ரணிலின் பிந்திய கணிப்பு. ரணில் - புதுடில்லி உறவை அவதானிப்பவர்கள் ஒரு விடயத்தை தெளிவாகக் கூறுகின்றார்கள். அதாவது, நடைபெறப்போகும் தேர்தலில் ரணிலை புதுடில்லி மறைமுகமாக ஆதரிக்கும் என்பதுதான் அது. இந்த நிலையில் ரணில் சற்று உற்சாகமாக இருப்பதாகவே தெரிகின்றது!

• • •

## காசா திறந்தவெளி சிறைச்சாலை வீரத்தின் விளைநிலமானதால்

# வேகம்பெறும் உலக ஒழுங்கு (World Order) மாற்றம்

**பாகம் 2**

### சூயஸ் கால்வாய் திறக்கப்பட்டபின்னர் மத்தியகிழக்கின் முக்கியத்துவம்

பத்து வருட பணியின் முடிவில் செயற்கையாக உருவாக்கப்பட்ட சுயஸ் கால்வாய் நவம்பர் 1869ல் திறந்து வைக்கப்பட்டதை அடுத்து மத்திய கிழக்கின் கேந்திர முக்கியத்துவத்துவம் பெரிதும் அதிகரித்தது. மேற்கையும் கிழக்கையும் இணைக்கும் கடல் மார்க்கத்தின் மையமாக அது மாறியது.



20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரித்தானியாவின் நோக்கம் அப்போது தமக்கு சவாலாக இருந்த துருக்கி - ஒட்டோமன் சாம்ராச்சியத்தை பலவீனப்படுத்துவதற்காக அதன் கீழிருந்த மத்தியகிழக்கு நாடுகளை கூறுபோட்டு பிரித்தாளுவதும் அதற்கு வசதியாக இஸ்ரேல் என்ற நாட்டை உருவாக்குவதுதான். இதற்கிடையில் ரஷ்யாவில் வெடித்த 1917 அக்டோபர் சோசலிச புரட்சியினை அடுத்து உருவான சோசலிச முகாமுக்கு அஞ்சி மத்திய கிழக்கு நாடுகளில் சோசலிசம் பரவிவிடாமல் தடுப்பதற்கும் தனது கட்டுப்பாட்டை மத்தியகிழக்கில் நிலைநிறுத்த முயன்றது. இதற்கு ஒருபுறத்தில் சவூதி என்ற நாட்டை உருவாக்கி மக்கா மதினா ஆகிய இரு பிரதான இஸ்லாமிய வழிபாட்டுத்தளங்களை அதன்கீழ் கொண்டுவந்து தனது கைப்பாவை மன்னராட்சியை நிறுவி இஸ்லாமிய மதவாதத்தை வளர்த்தது.

### எண்ணெய் வளம் அங்கு கண்டுபிடிக்கப்பட்டதும்

அதன் பின்னர் அதன் நோக்கம் மேலும் வலுப்பெறுவதற்கு எண்ணெய் வளம் அங்கு கண்டுபிடிக்கப்பட்டது காரணமானது. 1895ல் அமெரிக்காவின் (Titusville, Pennsylvania) பென்சில்வேனியாவிலுள்ள டைடுஸ்வைல் என்ற இடத்தில் உலகின் முதலாவது நவீன பெற்றோலிய எண்ணெய்க் கிணறு அகழ்வு வேலை வெற்றி பெற்றமை பெற்றோல் யுகம் தொடங்கி விட்டதை உலகிற்கு பறைசாட்டியது. அதைத் தொடர்ந்து உலகம் முழுவதற்கும் பெற்றோலிய பொருட்களை விற்பனை செய்யும் ஒரே நாடாக அமெரிக்கா கால் நூற்றாண்டுக்கு மேலாகத் திகழ்ந்தது. இதனால் அமெரிக்கா மேலும் செல்வ வள நாடாக மாறியது.



முதலாம் உலக மகாயுத்தத்தின் போது நேச நாடுகளின் பெற்றோலிய தேவையின் 90 சத வீதம் அமெரிக்காவிடமிருந்தே பெறப்பட்டது.

அமெரிக்காவின் பெற்றோலிய ஏகபோகம் மத்திய கிழக்கில் இருந்த பிரித்தானியாவின் செல்வாக்கு பிரதேசங்களில் பெற்றோலியம் கண்டு பிடிக்கப்பட்ட பின்னரே இல்லாமற் போனது. (Masjid Suleiman - 1) என்ற முதலாவது எண்ணெய்க்கிணறு மத்திய கிழக்கில் - ஈரானில் - தனது பெற்றோலிய விற்பனையை 1908 மே மாதம் 26ந் திகதி தொடங்கியது. அதன் பின்னர் ஈரானின் எண்ணெய் உற்பத்தி நீண்டகாலம் பிரித்தானியரது கட்டுப்பாட்டிலிருந்தது. பெற்றோலிய பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கும் விற்பனை செய்வதற்கும் ஈரானுக்கு உரிமையிருக்கவில்லை. விற்பனை செய்யப்படும் ஒவ்வொரு டொன்னுக்கும் மிகவும் சிறிய அளவு தொகை ஈராக்கிற்கு வழங்கப்பட்டது.



**பி. ஏ. காதர்**

இதனையடுத்து மத்திய கிழக்கில் பல பகுதிகளில் குறிப்பாக சவுதியில் எண்ணெய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. 1932ல் பாரசீகக் குடாவிலுள்ள பாஹ்ரேனில் முதலாவது எண்ணைக்கிணறு தனது உற்பத்தியைத் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து மத்திய கிழக்கின் முக்கியத்துவம் பெரிதும் அதிகரித்தது.

### இஸ்ரேல் உருவாக்கம்

எண்ணெய் வளத்தையும் சுயெஸ் கால்வாயையும் கொண்ட மத்திய கிழக்கு முழுவதும் முஸ்லிம் நாடுகளால் நிரம்பியிருக்கும் போது அங்கு தமக்கு நம்பிக்கையான காவலரணாகவும் Out post நம்பிக்கைக்குரிய படைத்தளமாகவும் Bastion செயற்படக் கூடிய ஒரு மாற்றினம் -யூதர்கள்- அங்கு இருந்தமை ஏகாதிபத்திய நாடுகளுக்கு நிம்மதியைத்



தந்தது. இராணுவ முகாமை அமைத்து அதனைப் பாதுகாப்பதை விட அதற்கு செலவழிப்பதை விட சுற்றிவர எதிரிகளை உருவாக்கி அவர்கள் மத்தியில் தம்மைப் பாதுகாதுகாத்துக் கொள்வதற்காக தீரத்துடன் போராடத்தயாராயுள்ள ஒரு மாற்றினம் தனக்கென ஒரு தனிநாட்டை அமைத்துக் கொள்ள முயலும் போது அதனை ஆதரித்து பராமரிப்பது இலாபகரமானது. செயற்பூர்வமானது என்பதை பிரித்தானியா உணர்ந்திருந்தது. ஆகவே இஸ்ரேல் என்ற நாட்டை உருவாக்க அரசியல் சியோனிஸ்டுகள் மேற்கொண்ட முயற்சியை அது ஆதரித்தது – அதற்கான உதவிகளை மறைமுகமாகச் செய்தது.

ஹிட்லரின் நாசிசம் ஒருவிதத்தில் இஸ்ரேல் உருவாவதற்கான அதிர்ஷ்டத்தை ஏற்படுத்தியது. பாசிசத்தால் படுகொலை செய்யப்படுவதற்கு பயந்து யூதர்கள் பெருமளவில் பல ஐரோப்பிய நாடுகளில் இருந்து வெளியேறினர். இவர்களை ஏற்க அமெரிக்காவும் ஏனைய மேற்கு ஐரோப்பிய நாடுகளும் மறுத்த அல்லது குடிவரவுக்கான கடுமையான கட்டுப்பாடு விதித்த பின்னணியில் பெருமளவு யூதர்கள் பலஸ்தீனத்திற்கு குடி பெயர்ந்தனர். இவ்வாறு அகதிகளாக வந்தவர்களை அன்போடு வரவேற்று தம்மோடு வாழ அனுமதித்தவர்கள் தான் பாலஸ்தீனியர்கள். இவர்களை குடியமர்த்தும் திட்டங்களை உலக யூத அமைப்பு திறமையாகச் செய்தது.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் பலவீனப்பட்டு போயிருந்த பிரித்தானிய ஏகாதிபத்தியம் மத்திய கிழக்கில் ஏற்பட்டிருந்த குழப்பகரமான நிலைமைக்கு ஈடுகொடுக்க முடியாமல் 1947 பெப்ரவரி மாதம் பலஸ்தீனம் தொடர்பாக தீர்மானம் எடுக்குமாறு அப்போது உருவாக்கப்பட்டிருந்த ஐக்கிய நாடுகள் தாபனத்தைக் கேட்டுக்கொண்டது. இதன்படி 1947 மே மாதம் ஐ.நா. பலஸ்தீன பிரச்சினை பற்றி ஆராய்வதற்காக விசேட ஆணைக்குழு ஒன்றை நியமித்தது. அதன் சிபரிசின் அடிப்படையில் 1947 நவம்பர் 29ந் திகதி பலஸ்தீனத்தை இரண்டாகப் பிரிக்கும் 181ம் இலக்க தீர்மானத்தை UN Partition Resolution (GA 181) ஐ.நா. நிறைவேற்றியது.



ஐ.நா. பலஸ்தீன பிரிவினை பற்றி அறிவித்ததை தொடர்ந்து மத்திய கிழக்கில் கொந்தளிப்பு நிலைமை உருவானது. கலவரங்கள் வெடிக்கத் தொடங்கின. பிரித்தானியருக் கெதிரான கிளர்ச்சிகள் ஈராக்கில் தீவிரமடைந்தது.. இப்படியான குழப்பகரமான நிலைமையை மேலும் சிக்கலாக்கும் விதத்தில் பிரித்தானியா மே 15 ந் திகதி தனது மென்டேட்டை கைவிடுவதாக முன் கூட்டியே அறிவித்தது. பிரித்தானியாவின் மென்டேட் முடிவுக்கு வருவதற்கு ஒரு நாள் முன்பதாக 1948 மே 14 ந்திகதி இஸ்ரேல் சுதந்திர பிரகடனம் செய்தது. அதே தினம் அமெரிக்கா அதனை அங்கீகரித்தது. அமெரிக்காவே இஸ்ரேலை அங்கிகரித்த முதலாவது நாடாகும். அடுத்து சோவியத் யூனியன் மே 17 ந் திகதி அதனை அங்கீகரித்தது.

### அமெரிக்கா இஸ்ரேலை தத்தெடுத்த பின்னர்

1967 யுத்தத்தில் இஸ்ரேல் அடைந்த பெரும் வெற்றியை அடுத்தே அமெரிக்கா முழுமையாக இஸ்ரேலை ஆதரிக்கத் தொடங்கியது. இன்று இஸ்ரேல் என்பது அமெரிக்காவின் மற்றொரு

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# ரஷ்ய, வடகொரிய அதிபர்களின் சந்திப்பும் அவர்களது ஒப்பந்தம் எழுப்பும் கேள்விகளும்

தமிழில்: ஜெயந்திரன்

ஒரு கால்நூற்றாண்டு காலத்தில், வடகொரியாவுக்கு முதல்தடவையாகப்பயணம்செய்யும் புட்டினது விஜயம், உலகம் முழுவதும் மிகவும் நுணுக்கமாக அவதானிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பயணத்தை உலகம் முழுவதுமே உன்னிப்பாக அவதானித்துக்கொண்டிருக்கிறது என்பது ரஷ்யாவுக்கு நன்கு தெரியும். இது தொடர்பாக வெளிவந்த காட்சிகளில் நிச்சயமாக உள்நோக்கம் இருக்கவே செய்கிறது.



அண்மைக்காலங்களில் பூகோள ரீதியாக நடைபெற்ற பல சந்திப்புகளில், புட்டின் கலந்து கொள்ளவில்லை. புட்டின் உக்ரேன் நாட்டை ஆக்கிரமித்ததன் காரணத்தினால், அவரைக் கைது செய்வதற்கான பிடிவிறாந்தைப் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றம் பிறப்பித்திருக்கிற பின்புலத்தில், உலகின் பல பாகங்களில் அவர் கைது செய்யப்படக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

இவ்வாறாக, உலகில் தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் ரஷ்ய அதிபருக்கு, பியொன்கியாங்கில் அமோக வரவேற்பு அளிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது கிம் சுங் சதுக்கத்தின் ஒரு பக்கத்தை புட்டினின் பாரிய படம் அலங்கரித்திருக்க, சமகாலத்தில், ரஷ்ய அரச ஊடகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒளிபரப்பில், கிரெம்ளின் தலைவருடைய படத்தைத் தாங்கிய சுவரொட்டிகள் வீதிகளில் வரிசையாக வைக்கப்பட்டிருந்தது காண்பிக்கப்பட்டது. புட்டின் தனிமைப்படுத்தப்படவில்லைஎன்பதுடன்உலகின்சில பாங்களில் அவருக்குப் பெருமதிப்பும் இருக்கிறது என்ற செய்தியும் பரிமாறப்பட்டிருக்கிறது.



இளைய நண்பனாக இருப்பதற்காக சீனாவைத் தவிர இங்கு யாரும் புட்டினைக் குற்றஞ்சாட்ட முடியாது. இந்த சந்திப்பில் இரு தலைவர்களும் ஆற்றிய உரைகளாக இருந்தாலும் சரி, அனைத்தையும் உள்ளடக்குகின்ற மூலோபாய ரீதியிலான நட்பு ஒப்பந்தமாக இருந்தாலும் சரி, புட்டின் தனது உரையில் குறிப்பிட்டது போல, அதிமுக்கியமாக அமெரிக்காவினதும் அதனது நட்பு நாடுகளினதும் ஏகாதிபத்திய கொள்கைக்கு எதிராகவே இவர்கள் இணைந்திருக்கின்றார்கள் என்ற உண்மை வெளிப்படையானது.

நேட்டோவின் 5வது சரத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது போன்று, இந்த ஒப்பந்தத்திலும் ஒரு விடயம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட "ஏதாவது ஒரு சாராருக்கு எதிராக ஒரு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் போது, மற்றைய சாரார் அவர்களுக்கு உதவிக்கு வருவார்கள்".

"ஓர் ஆயுத மோதலுக்கு இரண்டில் ஏதாவதொரு நாடு உள்ளாகும் போது, மற்றைய நாடு உடனடியாகவே இராணுவ ரீதியிலான உதவிகளையும், ஏனைய வகையிலான அனைத்து உதவிகளையும் உடனடியாகவே வழங்கும்" என்று ஒப்பந்தத்தின் 4வது சரத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாக வடகொரியாவின் அரச ஊடகத்தில் வெளியிடப்பட்ட ஒப்பந்த வரைவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எவ்-16 போன்ற தாக்குதல் விமானங்களையும், ஏனைய ஆயுதங்களையும் உக்ரேனுக்கு வழங்கியிருப்பதன் மூலம், தமக்குள்ள பன்னாட்டு ரீதியிலான பொறுப்புகளை மேற்குலகம் மீறியிருக்கிறது என்று புட்டின் மேற்குலகத்தைக் குற்றஞ்சாட்டியிருக்கிறார். இன்று ஒப்பமிடப்பட்டிருக்கின்ற இந்த வரைவுக்கிணங்க, கொரிய சனநாயக மக்கள் குடியரசுடன் ஓர் இராணுவ-தொழில்நுட்ப ரீதியிலான கூட்டுச்செயற்பாடு இணங்கப்பட்டிருக்கிறது என்பதையும் புட்டின் குறிப்பிடத் தவறவில்லை.

தமது அயல்நாடுகளுடனும் மேற்குலகத்துடனும் மோதல்கள் ஏற்படும் பட்சத்தில், ஒரு நாடு மற்றைய நாட்டுக்கு இராணுவ ரீதியிலான உதவியை வழங்கும் என்ற இணக்கம் இங்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறான ஓர் இணக்கப்பாடு பல முக்கியமான கேள்விகளை எழுப்புகின்றது.

இது ஒரு கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தமாக இருக்குமானால், ரஷ்யா தன்னகத்தே கொண்டிருக்கின்ற அணுவாயுதத் தடுப்பு ஆற்றல் வடகொரியாவுக்கும் வழங்கப்படுமா? அல்லது வடகொரியா தன்னகத்தே கொண்டிருக்கின்ற அணுவாயுதத் தடுப்பு வசதிகளை ரஷ்யாவுக்கு வழங்குமா போன்ற மிக முக்கியத்துவம் வாய்ந்த கேள்விகள் இங்கே எழுப்பப்படுகின்றன. இணைந்த இராணுவ ஒத்திகைகளை முன்னெடுப்பதையும், தமது எல்லைகளைப் பாதுகாக்க கூட்டுப்படைகளை உருவாக்குவதையும் இந்த ஒப்பந்தம் சுட்டுகின்றதா? போன்ற கேள்விகளும் இங்கே எழுப்பப்படுகின்றன.

'ஒரு வகையில், கடந்த சில மாதங்களாகவும், ஏன் வருடங்களாகவும் தாங்கள் மேற்கொண்டு வந்த ஆயத்தங்களை இப்போது அவர்கள் நடைமுறைப்படுத்துகிறார்கள்" என்று பாதுகாப்பு ஆய்வுகளுக்கான கொரிய நிறுவனம் என்ற அமைப்பின் துணை ஆய்வாளரான ஜோ பீ யுண் தெரிவித்தார். "இந்த சரத்து உண்மையில் அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

"உண்மையில் இவைகள் இப்போது ஆரம்ப கட்டத்திலே தான் இருக்கின்றன. தொடர்ந்து என்ன நடக்கும் என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும். அவர்களது இடத்தில் நான் இருந்தால், அவர்களுக்கு எழுகின்ற தேவைகளைப் பொறுத்தே இந்த சரத்துக்கான விளக்கத்தை அவர்கள் வழங்குவார்கள்."

இந்த ஒப்பந்தம் தொடர்பாக உடனடியான ஓர் கவலை எமக்கு இருக்கிறது. வடகொரியத் தொழிற்சாலைகளிலிருந்து மேலும் அதிகமான எறிகணைகளும், ஏவுகணைகளும் உக்ரேன் போர்முனைக்கு கொண்டுசெல்லப்படப் போகின்றனவா என்ன ஐயம் இங்கே எழுகின்றது.

இவ்வாறான ஒரு செயற்பாடு இடம் பெறும் என்பதை மொஸ்கோ, பியொன்கியாங் இரண்டுமே மறுத்திருக்கின்றன. வடகொரியா ஆயுதங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் செயற்பாடுகளுக்கு ஐக்கிய நாடுகள் முன்னர் தடைகளைக் கொண்டுவந்த பொழுது, ரஷ்யா அப்போது அந்தத் தடைகளுக்குத் தனது ஆதரவை வழங்கியிருந்தது. அரசியல் நோக்கங்களுக்காகத் தடைகளைக் கொண்டுவரும் விடயத்துக்கு இப்போது அது தனது எதிர்ப்பைப் பதிவுசெய்திருக்கிறது.

கடந்த மார்ச் மாதத்தில், வடகொரியாவுக்கு எதிராக விதிக்கப்பட்ட தடைகள் மீறப்பட்டமை தொடர்பாக விசாரணை செய்வதற்கென அமைக்கப்பட்ட குழுவுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தை பாதுகாப்பு கவுன்சிலில் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி ரஷ்யா மீளப்பெற்றிருந்தது.

மேற்குலகத்தைச் சாடுவதற்கு இங்கே கிடைத்த சந்தர்ப்பத்தை இழக்க ரஷ்ய அரச ஊடகம் விரும்பவில்லை. "புட்டினின் வடகொரியப் பயணம் தொடர்பாக மேற்குலகம் அதிகமாகக் கவலைகொள்கிறது" என்று மொஸ்கோவில் வெளியிடப்படும் நாளிதழான மொஸ்கோவ்ஸ்கி கொஸ்மோலெற்ஸ் கடந்த செவ்வாய்க்கிழமை எழுதியிருந்தது.



"நாங்கள் எங்கள் அயலவருடன் பேசுவது தொடர்பாக அமெரிக்கா ஏன் குழம்ப வேண்டும்? இவ்விடயம் உங்களை ஏன் அதிக கோபத்துக்கு உள்ளாக்குகிறது? என்று கிரெம்ளினின் பிரச்சாரகரான விளாடிமீர் சொலொவ்யொவ் செவ்வாய்க்கிழமை இரவு தனது தொலைக்காட்சி நிகழ்ச்சியில் குறிப்பிட்டார். "ஒரு மூன்றாம் உலகப் போருக்குள் ஏற்கனவே நாங்கள் இருக்கிறோம்" என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

அவ்வாறான ஒரு கூற்று மொஸ்கோவின் பிறிதொரு மூலோபாயத்தைச் சுட்டிநிற்கிறது. உக்ரேனுக்கு வழங்கும உதவிகளை மேற்குலகம் மேலும் அதிகரிப்பதை அணுவாயுதம் தொடர்பான தமது பரப்புரைகள் தடுக்கப்போவதில்லை என்பது ரஷ்யா புரியத்தொடங்கியிருக்கிறது.

நீண்டகாலமாக உக்ரேன் அமெரிக்காவிடமிருந்து எதிர்பார்த்த ஆயுதங்கள் உக்ரேனுக்குக் கிடைக்கத் தொடங்கியிருக்கும் இக்கணத்தில் தான், ரஷ்யஅதிபரின்கிம்யொங்உண்உடனானசந்திப்பும் அவர்களுடன் ரஷ்ய மேற்கொண்ட ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வும் அரங்கேறியிருக்கின்றன. இவ்வாறான ஆயுதங்களை ரஷ்யாவுக்கு எதிராக பயன்படுத்துவதில் இருந்த தடை தற்போது நீக்கப்பட்டிருக்கிறது.

போரில் தொடர்ந்து சண்டை பிடிக்க முடியாத ஒரு நிலையை எட்டி, சரணடையும் நிலைக்கு உக்ரேனைத் தள்ளுவதற்கு ரஷ்யாவுக்கும் இப்போது மேலதிக ஆயுதங்கள் தேவைப்படுகின்றன.

என்ன செய்வார்கள் என்று எதிர்வுகூறமுடியாத ஒரு அயல்நாட்டின் அணுவாயுத சக்தியை அதிகரிப்பதற்கான நிதியையும் தொழில்நுட்பத்தையும் வழங்கும் விடயத்தில், ரஷ்யா இன்னும் முழுமையாக ஆயத்தம் இல்லாத ஒரு பின்புலத்தில், (இவ்விடயம் சீனாவைப் பொறுத்த மட்டில் ஏற்புடையதாக இருக்காது) தாம் அவ்வாறு செய்வதற்கு விருப்பமான ஒரு நிலையிலேயே இருக்கிறோம் என்று மேற்குலகத்தை நம்பவைப்பதற்கு அது விருப்புடனே தான் இருக்கின்றது.

**நன்றி: *edition.cnn.com***


# பிரித்தானியா தேர்தல்

## மீண்டும் நாம் ஏமாற்றப்படுவதற்கான தளம்




வேல்ஸில் இருந்து அருஸ்

பிரித்தானியாவில் அடுத்த மாதம் இடம் பெறவுள்ள தேர்தலில் கடந்த 14 வருடங்களாக ஆட்சியில் இருக்கும் தற்போதைய பழமைவாதக் கட்சி மிகப்பெரும் தோல்வியை தழுவும் என்ற கணிப்புகள் வெளிவந்தவண்ணம் உள்ளன. அதேசமயம் எதிர்க்கட்சியான தொழில்கட்சி 650 ஆசனங்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் 400 இற்கு மேற்பட்ட ஆசனங்களைப் பெற்று வெற்றியீட்டலாம் என்ற கணிப்புக்களும் வெளி யாகியுள்ளன.


Sunak to lose seat in Tory wipeout, major poll predicts

Exclusive survey for The Telegraph also shows party on track to slump to 53 seats, with around three-quarters of Cabinet voted out



உக்ரைன் போர் ஏற்படுத்திய பொருளாதார வீழ்ச்சி, இஸ்ரேல் பாலஸ்தீனப் போரில் பிரித் தானியாவின் நிலைப்பாடு மக்களிடம் ஏற் படுத்தியுள்ள வாதப்பிரதிவாதங்கள் என்பன தற்போதைய அரசுக்கு மிகப்பெரும் சவாலாக மாறியுள்ளநிலையில் இந்த தேர்தல் கடும் போட்டியாக மாறியுள்ளது.

இந்த வருடம் உலகத்திற்கு மிகப்பெரும் சவாலான வருடம் 60 இற்கு மேற்பட்ட நாடுகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் என்பன தேர் தலை சந்திக்கும் வருடம். பல நாடுகளில் ஏற்கனவே தேர்தல்கள் முடிவடைந்துள்ள நிலையில் ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா, தென்னாபிரிக்கா, மெக்சிக்கோ போன்றவற்றில் இடம்பெற்ற தேர்தல்கள் பலவீனமான முடிவு களைக் கொடுத்துள்ள அதேசமயம், ரஸ்யா, ஸ்லோவேனியா, தாய்வான் போன்ற நாடுகளில் இடம்பெற்ற தேர்தல்கள் தற்போதைய பூகோள அரசியல் மாற்றங்களை பிரதிபலிப்பதாகவே அமைந்துள்ளன.

இந்தநிலையில்தற்போதுஇடம்பெறவுள்ள பிரித்தானியாவின் தேர்தல் மற்றும் நவம்பர் மாதம் இடம்பெறும் அமெரிக்காவின் தேர்தல் என்பன மிக முக்கியமான தேர்தல்களாக கருதப்படுகின்றன. அதன் முடிவுகள் உலக அரசியல் மற்றும் பொருளாதாரத்தில் எதிரொலிக்கவல்லவை.

அதேசமயம், இலங்கையில் இடம்பெற வுள்ள அரச தலைவர் தேர்தலில் தமிழ் அரசியல் தலைவரை தனியாக நிறுத்துவது என்ற தமிழ் மக்களின் முடிவு இலங்கையை மட்டுமல்லாது, பிராந்திய மற்றும் உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை(20) அவசரமாக இலங்கை வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெயசங்கர் தமிழ் கட்சிகள் அனைத்தையும் தனித்தனியாக அழைப்பு விடுத்து வரவழைத்து ஒன்றாக சந்தித்து சென்றுள்ளார். அந்த சந்திப்பிலும் அரச தேர்தலை புறக்கணிப்பது அல்லது பொது வான தமிழ் வேட்பாளரை நிறுத்துவது என்ற கருத்துகளும் விவாதிக்கப்பட்டுள்ளன.

தாயகத்தில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றங் களை புலம்பெயர் நாடுகளிலும் தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர். அதாவது பிரித்தானியா தேர்தலில் அங்கு வாழும் தமிழ் மக்களின் ஏறத்தாழ இரண்டு இலட்சம் வாக்குகளை அவர்கள் எவ்வாறு பயன்படுத்தப்போகின்றனர் என்ற எதிர்பார்ப்பு தான் அது.



மாறி மாறி எந்தவித பலனுமின்றி தொழிற் கட்சிக்கும், பழமைவாதக் கட்சிக்கும் வாக்குகளை போடுவதால் இதுவரையில் ஈழத்தமிழ் மக்கள் எந்த பலனையும் பெறவில்லை. எமது வாக்குகளை பெற்று பலமாக ஆட்சியமைக்கும் இந்த கட்சிகள் இலங்கை அரசை பாதுகாக்கும் பணிகளைத் தான் இதுவரையில் செய்து வந்துள்ளன.

ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணைக் குழுவில் இலங்கை அரசு மேற்கொண்ட போர்க் குற்றங்களுக்கு நீதிகோரி கொண்டுவரப்பட்ட தீர்மானத்தைக்கூட தமக்கு தேவையான ஆட்சி மாற்றத்திற்கும் இந்தியாவின் அரசியல் நலன் களுக்காகவும் பிரித்தானியா பயன்படுத்தியதே தவிர தமிழ் மக்கள் தொடர்பில் எந்த அக்கறையும் காண்பிக்கப்படவில்லை.




கடந்த மாதம் இடம்பெற்ற முள்ளிவாய்க் கால் இனப்படுகொலை நினைவேந்தல் தொடர் பில் வழமைபோல தமது அறிக்கைகளை வெளி யிட்ட பிரித்தானியாவின் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் மீண்டும் மீண்டும் தமிழ் மக்களை ஏமாற்றுவதையே செய்துவருகின்றன.

அதிலும் பிரித்தானியாவின் வெளிவிவகார அமைச்சரும், முன்னாள் பிரதமரும், 2013 ஆம் ஆண்டு இலங்கை சென்று தமிழ் மக்களின் இன்னல்களை நேரிடையாக கண்டுவந்தவருமான டேவிட் கமரோன் கடந்த மாதம் வெளியிட்டுள்ள அறிக்கையிலும் இறுதி வரியில் இலங்கையின் அரசியலை பலப்படுத்தி, உறுதிப்படுத்துவதே தமது நோக்கம் என கூறியது என்பது அவர்க ளின் போலித்தன்மையை தெளிவாக அம்பலப் படுத்தியிருந்தது.

தொழில் கட்சிக்கான தமிழர்கள், பழமை வாதக் கட்சிக்கான தமிழர்கள் என தமிழ் மக்கள் அரசியல்ரீதியாக பிரிந்து நின்று பிரித்தானியாவின் கட்சிகளுக்காக இதுவரை காலமும் தமது நேரத்தை யும் பணத்தையும் விரயம் செய்ததற்கான பலனை நாம் இதுவரையில் பெறவில்லை.

எமக்கு நன்மை செய்யவில்லை என்பதை விட இலங்கை அரசை பலப்படுத்தி எம்மை பலவீனப்படுத்தும் நடவடிக்கைகளையே நாம் கண்டுள்ளோம். இந்த கட்சிகளுக்காக பணியாற்றும் பிரித்தானியாவை தளமாகக் கொண்ட அமைப் புக்களும், தனிநபர்களும், அதனால் தமிழ் மக்கள் எந்த பலனை பெற்றனர் என்ற பொறுப்புக்கூறலை இதுவரையில் செய்யவில்லை.

ஒவ்வொரு வருடமும் தைப்பொங்கலுக் கும், புதுவருடத்திற்கும் பிரித்தானியா நாடாளு மன்ற உறுப்பினர்களுக்கும், அமைச்சர்களுக்கும் வேட்டி கட்டி அழகு பார்ப்பதும், பொங்கல் பொங்கி படைப்பதும், அவர்களை மகிழ்ச்சிப் படுத்துவதையுமே இந்த அமைப்புக்கள் செய்து வருகின்றனவே தவிர அவர்களுக்கு அழுத்தங்களை மேற்கொண்டு தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்ற எள்ளளவு முயற்சிகள் கூட நடந் தேறவில்லை.



பிரித்தானியா அமைச்சர்களை மகிழ்ச்சிப் படுத்துவதாலும், பிரித்தானியாவில் மாறி மாறி ஆட்சிக்கு வரும் கட்சிகளுக்கு போட்டிபோட்டு வாக்குகளை வாங்கிக் கொடுப்பதாலும் பிரித்தா னியாவில் உள்ள சில அமைப்புக்களும், தனிநபர்களும் மற்றும் வர்த்தகர்களும் தனிப்பட்ட ரீதியில் நன்மைகளை பெற்று வாழலாம். அல்லது தமது பெயர்களை உயர்த்திக் கொள்ளலாம் அதனால் என்ன பலன் எமது இனத்திற்கு இதுவரையில் ஏற்பட்டுவிட்டது என்பதற்கு யாரும் பதில் சொல்ல முடியாது.

இந்த பத்தி எழுதப்படும் போது தமிழர்கள் இரு பிரிவாக பிரிந்து நின்று பிரித்தானியா கட்சி களுக்கு வாக்கு சேகரிப்பதற்கு தமிழ் மக்களை கூவி அழைக்கின்றனர். தமிழ் மக்கள் இந்த கட்சிகளுக்கு

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## கிழக்கில் ... தொடர்ச்சி ...

பிரசாந்தனின் கிராமமான ஆரையம்பதியில் உள்ள கோவில்குளம் என்ற கிராமத்தில் சுமார் 1000ஆண்டுகள் பழமையான சிவன் ஆலயம் ஒன்றின் இடிபாடுகள் 2018ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டு அகழ்வுப்பணிகள் முன் னெடுக்கப்பட்டுவந்த நிலையில் 2020ஆம் ஆண்டு கோத்தபாய ஆட்சியின் பின்னர் முஸ்லிம் களின் எதிர்ப்பு காரணமாக அந்த அகழ்வுப்பணி இடைநிறுத்தப்பட்டு சிவன் ஆலயம் இருந்த இடங்கள் முழுமையாக மூடப்பட்டு அந்த இடத்தில் இஸ்லாமிய மக்கள் குடியமர்த்தப் பட்டுள்ளனர்.

அந்த இடத்தினையே காப்பாற்ற முடி யாதவர்கள் அல்லது அகழ்வுப்பணியை மீண்டும் முன்னெடுக்கமுடியாதவர்கள் இன்று வீரமுனைக்கு சென்று நுழைவாயில் அமைப்பதற் கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

இவர்கள் தொடர்பில் கிழக்கு மாகாண தமிழர்களும் முஸ்லிம்களும் மிகவும் அவதானமாக செயற்படவேண்டிய காலமாக இந்த காலம் இருக்கின்றது. இரு இனங்களை சேர்ந்த சிவில்சமூக செயற்பாட்டாளர்களும் அரசியல்வாதிகளும்; மதத்தலைவர்களும் தங்களுக்குள் ஏற்படும் முரண்பாடுகளைதீர்ப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும்.

இரு சமூகங்களும் இணைந்து பரஸ்பரம் விட்டுக்கொடுப்புடன் செயற்படுவதன் மூலமே எதிர்காலத்தில் கிழக்கு மாகாணத்தில் இரு இனங்களும் நிம்மதியாக வாழும் நிலை மையினை உருவாக்கமுடியும். இதற்கான செயற்பாடுகளை இரு சமூகத்தில் உள்ளவர்கள் முன்னெடுப்பதன் மூலமே எதிர்காலத்தில் இரு சமூகங்களிடையே பிரச்சினைகளை தோற்று விக்க முற்படுவோரின் முகத்தில் கரியை பூசுவதற் கான நிலைமைகள் உருவாகும் என்பதை உணர்ந்து செயற்படவேண்டும்.

• • •

## ரணிலுக்கு நிழல்.. தொடர்ச்சி ...

தமிழ் மக்களின் அங்கீகாரத்துடன் தொடர்ந்து நாடாளுமன்றினை அலங்கரித்து வருபவர்கள் தமிழர்களுக்கு பெற்றுக்கொடுத்ததைவிட அவர்க ளது அறிதலுக்கும் புரிதலுக்கும் உட்பட்டதாக பறிக்கப்பட்டவைகளே ஏராளம்.

நிலமை இதுவாக இருக்கையில், அரசி யல் ரீதியாக தமிழ் மக்கள் சார்ந்து நேர்மையாக முடிவுகளை எடுத்து உறுதியுடன் செயற்பட்டு அரசியல் தீர்வு உள்ளிட்ட அன்றாட பிரச்சினை களுக்கு தீர்வினை காண்பதற்கு திராணியற்றவர் களே, கடந்தகால தீர்மானங்கள் மீதான குற்றச் சாட்டுகளுக்குள் ஒழிந்து கொண்டு தென்னிலங்கை தரப்பினர் மீதான தமது அபிமானத்தை வெளிப் படுத்தி வருகின்றனர்.

• • •

## பிரித்தானியா ... தொடர்ச்சி ...

வாக்குகளை வலிந்து போடுவதற்கும், அவர் களுக்கு வாக்கு சேகரிக்கும் கூட்டங்களுக்கு சென்று பணத்தை விரையம் செய்வதற்கும் என்ன பிரதியுபகாரங்களை இந்த கட்சிகள் ஆட்சிக்கு வந்ததும் எமக்கு செய்துள்ளன அல்லது செய்யப் போகின்றன?.

இந்த கட்சிகளால் முன்மொழியப்பட்டு தமிழ் மக்களின் இறைமைக்காக உழைக்கும் தமிழ் பிரதிநிதிகள் தேர்தலில் களமிறங்கினால் அவர்களை ஆதரித்து நாம் வெல்லவைக்கலாம். ஆனால் இந்த கட்சிகளுக்காக வலிந்து போடும் வாக்குகளால் எந்த நன்மையும் இதுவரையில் ஏற்பட்டுவிடலில்லை.

தொழில் கட்சிக்கான தமிழர்கள், பழமை வாதக் கட்சிக்கான தமிழர்கள் என தமிழ் மக்கள் அவர்களுக்கு பணிசெய்து கிடப்பதை விடுத்து எமது வாக்குப் பலத்தால் தமிழர்களுக்கான தொழிற்கட்சி அல்லது தமிழர்களுக்கான பழமைவாதக்கட்சி என அவர்களை நாம் எப்போது எமக்காக மாற்றப்போகின்றோம் என்பதே இன்று தமிழர் மனங்களில் எழுந்து நிற்கும் கேள்வி.

இந்த இரு கட்சிகளுக்கும் வாக்களிப் பதால் ஈழத்தமிழ் மக்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கப்போவதில்லை என்றால் பிரித்தானியா வில் நடைபெறும் தேர்தலை நாம் தனியாக பிரித்தானியாவுக்கான தேர்தலாக மட்டும் பார்த்து பிரித்தானியா மக்களின் வாழ்வாதரத்தை அழித்த இந்த இரு கட்சிகளையும் புறம்தள்ளி அந்த அந்த பிரதேசங்களின் நன்மைக்காக உழைக்கும் சுயாதீன வேட்பாளர்களுக்கு வாக்களித்து நாம் வாழும் பிரதேசத்தினதும், பிரித்தானியாவினதும், உல கின் அமைதிக்கும் உறுதுணையாக நிற்பதே சாலச் சிறந்தது.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு இடம் பெற்ற உள்ளூராட்சி தேர்தலில் அதனை தான் எனக்கு தெரிந்த பலர் மேற்கொண்டதாக என்னிடம் கூறினார்கள். நாம் ஏமாற்றப்படுகின்றோம் என உணராதவரை எமக்கான விமோசனம் கிடைக்கப் போவதில்லை. அது தான் யதார்த்தமும் கூட

• • •

## நடைமுறைக்கு ... தொடர்ச்சி ...

விடயங்களைஇலங்கைஇன்னும்நினைத்துக்கூடப் பார்க்கவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டையும் விதித்திருக்கின்றார்கள். குறிப்பாக ஊழல் எதிர்ப்பு போன்ற நடவடிக்கைகள், கொள்வனவுகளில் வெளிப்படைத் தன்மை போன்றன இன்னும் நடை முறைப்படுத்தப்படவில்லை.

இதற்குரிய சட்டங்கள் சில அண்மைக் காலத்தில் நிறைவேற்றப்படுகின்றது. இவை நடை முறைப்படுத்தப்படும் போது இந்த வெளிப் படைத்தன்மை, பொறுப்புக் கூறல், ஆட்சி முறை போன்றவற்றை முன்னேற்ற முடியும் என்று அரசாங்கம் சொல்கின்றது.

அதாவது, சர்வதேச நாணய நிதியத்தின் பார்வையில் இலங்கை சரியான திசையில் சென்று கொண்டிருக்கின்றது. ஆனால், பெரும் சமூக அவலத்தை சந்தித்துத்தான் இந்த வரி வருமானம் போன்ற அடைவுகள் பெறப்பட்டுள்ளன. குறிப்பாகப் பார்த்தால் இலங்கையின் வறுமை நிலை 11 வீதத்திலிருந்து 25 வீதமாக அதிகரித்திருக்கின்றது. அதாவது வறுமை இரு மடங்காக அதிகரித்திருக்கின்றது. அதேபோல தொழில்புரிவோர் மத்தியில் வறுமை என்பது ஒரு மோசமான விடயமாகப் பார்க்கப்படுகின்றது. தொழில் புரிகின்றார்கள். ஆனால், பெறுகின்ற வருமானம் அவர்களுடைய வாழ்க்கையை நடத்துவதற்குப் போதுமானதாக இல்லை. அதனால், முன்னர் மேற்கொண்ட செலவுகளை அவர்களால் செய்ய முடியாத நிலை உள்ளது. அவர்களின் வாழ்க்கைத் தரம் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

வறிய நிலையில் உள்ளவர்களுக்கு அஸ் வஸம போன்ற உதவித் திட்டங்கள் இருக்கின்ற போதிலும், நடுத்தர மக்கள்தான் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களை இலக்கு வைத்துத்தான் வரிகளும் விதிக்கப்படுகின்றன. இது அவர்களுடைய நிலையை மேலும் மோச மாக்குகின்றது!

• • •

## பிரித்தானியா ... தொடர்ச்சி ...

எனினும் எதிர்வரும் தேர்தலில் பழமை வாதக் கட்சி 155 ஆசனைங்களையே பெறும் எனவும் அது தற்போது அது கொண்டு ள்ள 344 அசனங்களைவிட அரைவாசிக்கும் குறைவானது. 1997 ஆம் ஆண்டு தொழில்கட்சியிடம் பழமை வாதக் கட்சி தேற்றபோது பெற்ற ஆசனங்களை விட இந்த எண்ணிக்கை குறைவா னது எனவும் News Agents podcast என்ற அமைப்பு நடத்திய கருத்துக்கணிப்பில் தெரி வித்துள்ளது.

இதனிடையே YouGov என்ற அமைப்பு மேற்கொண்ட கருத்துக் கணிப்பில் ஆட்சியில் உள்ள பழமைவாதக் கட்சி 108 ஆசனைங்களையே பெறும் சாத்தியங்கள் உள்ளது எனவும், அது 1906 ஆம் ஆண்டு லிபரல் கட்சியிடம் தோற்றபோது பெற்றதைவவிட குறைவானது எனவும் தெரி வித்துள்ளது.

எதிர்வரும் தேர்தலில் தற்போதைய எதிர்க் கட்சித் தலைவர் கியர் ஸ்ராமர் பிரதமராக வரும் சாத்தியங்கள் அதிகம் உள்ளதாகவும் தொழிலாளர் கட்சி 400 ஆசனங்களைப் பெறலாம் எனவும் இந்த ஆய்வுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் லிபரல் டெமோங்கிரட்டிக் கட்சி 50 தொடக்கம் 67 ஆசனங்களைப் பெறலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்திய உளவு ... தொடர்ச்சி ...

படுகொலை செய்யப்பட்டிருந்தார். இந்த படு கொலைக்கு இந்தியாவே காரணம் என கனேடிய பிரதமர் ஜஸ்ரின் ருடோ குற்றம் சுமத்தி யிருந்தது இரு நாடுகளுக்கும் இடையிலான முறுகல் நிலையை அதிகரித்திருந்தது. நிஜாரை பயங்க ரவாதிகளின் பட்டியலில் இந்தியா சேர்த்த பின்னரே இந்த படுகொலை இடம்பெற்றிருந்தது.

இந்தியா இந்த குற்றச்சாட்டுக்களை தொடர்ந்து மறுத்து வருகின்றபோதும் இந்த வருடம் இந்த கொலையில் தொடர்புள்ள முக்கிய நபர்களை தாம் கைது செய்துள்ளதாகவும் கைது செய்யப்பட்ட அனைவரும் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் எனவும் கனடா தெரிவித்திருந்தது. இந்த படுகொலையை தொடர்ந்து இரு நாடுகளும் தமது நாடுகளில் இருந்த இராஜதந்திரிகளை வெளியேற்றியிருந்தன.

இதனிடையே நிஜாரின் படுகொலை இடம்பெற்று ஒரு வருடம் கடந்துள்ள நிலையில் இந்திய பிரதமருக்கு அதற்கான தண்டனை வழங்கப்படுவது போன்ற வீதி நாடகம் ஒன்று கனடாவில் உள்ள இந்திய தூதரகத்திற்கு முன்பாக நடத்தப்பட்டிருந்தது. அதில் சிறைச் சாலை உடையுடன் இந்திய பிரதமரின் உருவப் பொம்மை இழுத்துச் செல்லப்பட்டு தீயிடப் பட்டது.

## காசா திறந்த ... தொடர்ச்சி ...

விதமான நவீன இராணுவ முகாமாகும். இன்று உலகிலேயே மிக நவீனமான தொழில் நுட்பத் தைக் கொண்டிருக்கும் - அமெரிக்காவுக்கு அடுத்த படியான – பலம்பெருந்திய இராணுவத்தை இஸ்ரேல் கொண்டிருக்கிறது. இஸ்ரேலை பரா மறிப்பதற்காக அமெரிக்கா நாளொன்றுக்கு பல மில்லியன் டெலர்களை செலவழித்து வருகிறது. இதனை விட இராணுவ தளபாடங்களையும் பொருளாதார நிபுணத்துவ தொழில்நுட்ப உதவி களையும் வழங்கிவருகிறது.

தமது மண்ணில் அகதிகளாக வந்த யூதர் களை வரவேற்ற பாலஸ்தீனியர்கள் அவர்கள் தமது நாட்டைவிட்டு விரட்டியடித்துவிட்டு அங்கு மண்ணின் மைந்தர்களை திறந்தவெளிச் சிறையில் அடைத்து மதத்தின் புனைவுக்கதையின் பேரால் கொடுமைப்படுத்தும்போது அவர்கள் அதற்கெதி ராக போரிடாமல் இருந்தால் அதற்குப்பேர்தான் அடிமை மனோபாவம். உலகின் மிகப்பெரும் மேற்கத்திய வல்லரசுகள் அனைத்தும் ஒருசேர இஸ்ரேல் என்ற ஆக்கிரமிப்பாளனுக்கு பூரண ஆதரவுதரும்போது-இஸ்ரேல் உலகின் பொதுவான சட்டங்கள் அனித்தையும் மீறிக்கொன்டு பெண்கள் வயோதிபர் சிறுவர் குழந்தைகள் நோயாளிகள் உட்பட அனைத்து பாலஸ்தீனியர்கள் மீதும் மத-தேசிய வெறியாட்டம் நடத்தும்போது போது - அவர்கள் இத்தனைக்காலமும் மனம் தளராமல் போராடுவது விடுதலை இயக்கங்களுக்கு பெருமை சேர்க்கும் விடயமாகும்.

**தொடரும்**

## ஏட்டுச் சுரை ... தொடர்ச்சி ...

தொழிலாளர்களின் உழைப்பை உறிஞ்சுவதையே குறியாகக் கொண்டுள்ளன.

ஜனவசம, அரச பெருந்தோட்டயாக்கம் மற்றும் எல்கடுவ பிளான்டேஷன் கம்பனி ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த சுமார் 7000 தொடக்கம் 10,000 வரையான தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சட்டரீதியான கொடுப்பனவுகளான ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி மற்றும் சேவைகாலப் பணம் என்பவை பல மில்லியன் ரூபாய்கள் வழங்கப்படாது பிரச்சினையாக உள்ளதாக அண்மைய செய்திகள் வலியுறுத்தின. இவர்களுக்கு மொத்தமாக சுமார் 1800 மில்லியன்களுக்கும் அதிகமான தொகை வழங்கப்படவேண்டி இருந்ததும் குறிப்பிடத்தக்கதாகும். தமக்குரிய கொடுப்பனவுகளை உரியவாறு பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் சில தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளமை கொடுமையிலும் கொடுமையாகும். இதேவேளை தோட்டத் தொழிலாளர்களோடு, தோட்ட சேவையாளர்களும் பல் வேறு சிக்கல்களுக்கும் முகம் கொடுத்து வருகின்றமையும் புதிய விடயமல்ல.

### புதிய உத்திகள்

இதனிடையே தொழிலாளர்களின் உழைப்பை சுரண்டி முதலாளிமார்கள் செல்வந்தராகின்றார்கள். முதலாளிமார்களுக்கு தோட்டங்களை முறையாக பராமரித்து முன்னேற்ற முடியாதென்றால், அந்தத் தோட்டங்களை மீண்டும் அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டு முறையாக பராமரிக்க முடியுமானவர்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று இலங்கை அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்திருக்கின்றார். மேலும் தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த குறைந்தபட்ச சம்பளம் 1700 ரூபா வழங்கப்பட வேண்டும். புதிய உத்திகளைப் பயன்படுத்தி அதிகளவான தேயிலைக் கொழுந்துகளை உற்பத்தி செய் யும் தோட்டங்கள் உருவாக்கப்படுதல் வேண்டும். நவீன தொழில்நுட்பத்தைக் கையாண்டு உற்பத்தியை அதிகரிப்பதற்கான வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதிக வறுமை நிலை தோட்டத்துறையிலேயே உள்ளது என்று தெரிவித்துள்ள அமைச்சர் மனுஷ நாணயக்கார, தொழிலாளர்களை பாதுகாக்கும் வகையில் சட்டங்களை மாற்றியமைக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத் தியுள்ளார்.

தோட்டத் தொழிற்றுறையில் நிலவும் நெருக்கடிகள் தேயிலைத் தொழிற்றுறையின் மீது இன்றைய இளைஞர்கள் நாட்டம் கொள்வதற்கும், ஈடுபடுவதற்கும் தடையாக உள்ளன. அத்தோடு மலையகத்தின் கல்வி அபிவிருத்தி உள்ளிட்ட பல காரணிகளும் இதில் செல்வாக்கு செலுத்துகின்றன. இந்நிலையில் எதிர்காலத்தில் இத் தொழிற்றுறை சவால்கள் பலவற்றுக்கும் முகம் கொடுக்க வேண்டியேற்படும் என்று நம்பப்படுகின்றது. இதனிடையே 2050 ம் ஆண்டளவில் பெருந்தோட்டங்கள் தடமிழக்கும் அபாயமுள்ளதாகவும் இதேவேளை சிறுதோட்டங்கள் அதிகரிக்குமென்றும் ஏற்கனவே எதிர்வு கூறப்பட்டிருந்தமையும் நீங்கள் அறிந்ததேயாகும்.

இதேவேளை சமகாலத்தில் தொழிலாளர்களின் நலன்களை மையப்படுத்திய சட்டங்கள் பலவும் காணப்படுகின்றன. அத்தோடு மேலும் பல புதிய சட்டங்களை உருவாக்க வேண்டியதன் அவசியமும் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வருகின்றது. எவ்வாறெனினும் சட்டங்கள் ஏட்டளவில் முற்றுப்பெறாது நடைமுறைச் சாத்தியம் மிக்கதாக காணப்படுதல் வேண்டும். இல்லையேல் எத்தனைச் சட்டங்கள் காணப்பட்டபோதும் அதனால் எவ்வித பயனுமில்லை என்பதே உண்மையாகும்.

• • •

## இலங்கை ஐ.நா ... தொடர்ச்சி ...

அரசாங்கம் தாம் வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

பலவந்தமான காணாமல் போதல்களால் ஏற்படும் துன்பங் கள் மற்றும் அனைத்து சமூகங்கள் மீதான அதன் தாக்கத்தையும் நிவர்த்தி செய்வதற்கு என அதில் கோரப்பட்டுள்ளது. தீவிரவாத எதிர்ப்பு மற்றும் இணையப் பாதுகாப்பு தொடர்பான சட்டங்கள் உட்பட இலங்கையினால் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் எந்தவொரு புதிய சட்டமும், அனைவரதும் கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாப்பது உட்பட அதன் மனித உரிமைக் கடமைகளை நிறைவேற்றுவது மிகவும் முக்கியமானதாகும்.

நீதித்துறை சுதந்திரம், நாட்டின் சட்ட நிறுவனங்களின் சுதந்திரம் மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியமும் வலியுறுத்தப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து

காணிகள் விடுவிக்கப்படுவது வரவேற்கப்படுகின்றது. அதேவேளை இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் காணி அபகரிப்பு தொடர்பான பதற்றங்கள், தன்னிச்சையான கைதுகள், ஒழுங்கற்ற தேடுதல்கள் மற்றும் தடுப்புக்காவலின் போது மோசமான முறையில் நடத்தப்படல் போன்ற நிலைமைகள் குறித்து கரிசனைக் கொள்ளவேண்டியுள்ளது.

நிலைமாறு கால நீதிப் பொறிமுறைகள் சுயாதீனமான, பக்கச்சார்பற்ற, வெளிப்படையான மற்றும் பாதிக்கப்பட்ட சமூகங்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வதை உறுதி செய்யுமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சேனையூர் ... தொடர்ச்சி ...

இதனை தொடர்ந்து சம்பவ இடத்தினை மூதூர் நீதிவான் நீதி மன்ற நீதிபதி தஸ்னீம் பௌசான் சனிக்கிழமை(15) அன்று விஜயம் செய்து பார்வையிட்டதுடன் குறித்த வழக்கானது வியாழக் கிழமை(20) மூதூர் நீதிமன்றில் நீதிமன்ற பதில் நீதவான் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது

இது தொடர்பான வழக்கை மூதூர் நீதிமன்றில் சம்பூர் பொலிஸார் முன்னர் தாக்கல் செய்திருந்தனர். குறித்த வழக்கில் இரு தரப்பினரும் ஆஜராகியிருந்தனர். கைது செய்யப்பட்டு சொந்த பிணையில் விடுவிக்கப்பட்ட 10 நபர்களுக்கும் சார்பாக சட்டத்தரணிகளான பு.முகுந்தன்,நா.மோகன், சிரேஷ்ட சட்டத்தரணி டாக்டர் தங்கமுத்து ஜயசிங்கம் ஆகியவர்கள் ஆஜராகியிருந்தனர்.

குறித்த வழக்கானது எதிர்வரும் 2024.07.04ந் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக மூதூர் நீதிமன்ற பதில் நீதவானால் மன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்கா ... தொடர்ச்சி ...

ஆவார்.

முக்கியமானதும், மிகவும் நவீனத்துவமானதுமான தொழில்நுட்பங்கள் தொடர்பான உடன்பாடு இரு நாடுகளுக்கு மிடையில் 2023 ஆம் ஆண்டு ஏற்படுத்தப் பட்டிருந்தது. மேலும் இரு நாடுகளுக்குமிடையில் ஆய்வுகளில் முதலீடுகளை மேற்கொள்வது, வர்த்தக, பொது விண்வெளி ஆய்வுகள் மற்றும் பாதுகாப்பு உடன்பாடுகள் தொடர்பில் இரு நாட்டு அதிகாரிகளும் இணைந்து அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

ரஸ்யாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகள் பலமாக இருப்பதால் அமெரிக்காவின் தொழில்நுட்பங்களை இந்தியா பாதுகாக்க வேண்டும் என்ற கோரிக்கையை அமெரிக்கா வலியுறுத்திவருகின்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை(16) சுவிற்சலாந்தில் இடம்பெற்ற உக்ரைன் தொடர்பான மாநாட்டில் அமெரிக்கா தலைமையிலான கூட்டணி நாடுகள் முன்வைத்த தீர்மானத்தில் இந்தியா கையொப்பமிடாமல் தவிர்த்துக் கொண்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்தியாவுக்கு அமெரிக்காவின் எம்.கியூ-9பி என்ற ஆளில்லாத தாக்குதல் மற்றும் உளவு விமானங்களை விற்பது தொடர்பிலும் இந்த சந்திப்பில் பேசப்பட்டுள்ளது.

நியூயோர்க்கைத் தளமாகக் கொண்ட வழக்கறிஞரும் காலிஸ்தான் அமைப்பு ஒன்றின் தலைவருமான குர்பத்வன் சிங் பனும் என்பவரை படுகொலை செய்ய இந்திய உளவுத்துறை முயன்றதாக அமெரிக்கா குற்றம் சுமத்திய நிலையில் இந்த சந்திப்பு நிகழ்ந்துள்ளது.

## தமிழ் அரசு ... தொடர்ச்சி ...

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தவேண்டியதன் அவசியம் பற்றியும் தமிழ் மக்கள் ஒன்றுசேர தவறும் பட்சத்தில் தமிழ்மக்களின் வாக்குகளும் பலமும் சிதறும் ஆபத்துக்கள் பற்றியும் தமிழ் மக்கள் பொதுச்சபையின் சார் பாக கலந்துகொண்டோர் விளக்கமளித்தனர்.

அத்துடன் கலந்துகொண்டவர்களோடு கேள்வி பதில் உரையாடல்களும் இடம்பெற்றன. தொடர்ந்துவரும் நாட்களில் தங்களின் பங்களிப்பும் இருக்கும் என கலந்துகொள்ளும் மக்கள் அமைப்புகளின் அங்கத்தவர்கள் நம்பிக்கை வெளியிட்டுவருகின்றனர்.

JR Print
www.jrprint.com
0208 503 6643
61, Hoe Street, Walthamstow
London E17 4SA
Email:jrprintuk@gmail.com
Fast, Relaible & Friendly Service
Guaranteed Delivery Within 72 Hours In Europe at Minimal Cost
Call For Free Guatation

## நில அபகரிப்பை ... தொடர்ச்சி ...

அவர்களுக்கு மண் ஏற்றுபவர்கள் அவர்களுக்கு உறுதிப் பத்திரம் வழங்கியவர்கள் அவ்வாறான பதவிகளை வழங்கியவர்கள் தகுதி இல்லாதவர்களுக்கு வழங்கப்பட்ட பதவிகள் இவ்வாறானவர்கள் தான் அவர்களுக்கு பின்னால் நிற்கின்றார்களே தவிர அவர்களும் தங்களுடைய பதவியைப் பெற்றதன் பிற்பாடு என்ன முடிவுகள் எடுப்பார்கள் என்பது எமக்கு தெரியும்.

**தேர்தல் காலம் நெருங்குகின்ற நேரத்தில் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் இன ரீதியான முரண்பாடுகள் தோற்றுவிக்கப்படுகின்ற செயற்பாடுகள் வழமையாக இடம்பெற்று வருகின்றது. தேர்தல் காலம் வருகிறது இந்த நேரத்தில் இனரீதியான செயல்பாடுகளை தடுப்பது தொடர்பான திட்டங்களை நீங்கள் நடைமுறைப்படுத்தி இருக்கின்றீர்களா? அவ்வாறான திட்டங்கள் என்ன அதனை தடுப்பதற்கான மாற்றுத்திட்டங்கள் என்ன?**

தேர்தல் காலங்களில் மிக முக்கியமாக நீங்கள் கூறுவது போன்று கிழக்கில் முஸ்லிம் மக்கள் எங்களுடன் சேர்ந்து வாழ்கின்றவர்கள் இந்த முஸ்லிம் மக்களையும் தமிழ் மக்களையும் ஒரு கொதி நிலையிலே வைத்திருப்பதற்காக அரசு எடுக்கின்ற முடிவுகளில் இதுவும் ஒன்று இன முரண்பாடு.

அந்த ஒரு விடயம் இன்று 50 ஆவது நாளை கடந்திருக்கின்றது ஒரு போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது கல்முனையில் கல்முனை உப பிரதேச செயலகம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்கின்ற நீண்ட நாள் போராட்டம் ஆனது தொடர்ச்சியாக அந்தப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது அதற்கு இன்னமும் கூட ஒரு கணக்காளர் நியமிக்கப்படவில்லை அதற்கான போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

அந்த அடிப்படையில் எங்களை பொறுத்தளவில் முஸ்லிம் மக்களின் வாக்குகள் வருகின்ற தேர்தலில் ஜனாதிபதிக்கு தேவை அதேபோன்று தமிழ் மக்களினுடைய வாக்குகளும் தேவையை அந்த தேவையை நிமிர்த்தம் அந்த உப பிரதேச செயலகத்தைதரமுயர்த்தாமல்இனமுரண்பாட்டை தோற்றுவிக்கும் ஒரு செயற்பாட்டை அரசு மேற்கொண்டு வருகின்றது.

ஆகவே நாங்கள் கூறுகின்றோம் என்னவென்றால் எதுவாக இருந்தாலும் அந்தந்த பிரதேச செயலகங்களுக்கு உரிய அதிகாரம் வழங்கப்பட வேண்டும் குறிப்பாக கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்திற்குரிய அதிகாரங்கள் முற்றாக வழங்கப்பட வேண்டும்.

அந்த மக்கள் கூடுதலாக பாதிக்கப்படுகின்றார்கள் முஸ்லிம் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட அந்த பிரதேச செயலாளர் இங்கே வருகை தந்து காணி அதிகாரங்களை அதாவது அங்கு இருக்கின்ற பிரதேச செயலாளரை விட்டு விட்டு அவரது விருப்பத்துக்கு மாறாக அந்த பிரதேச செயலகத்துக்குள் புகுந்து அதற்குள் இருக்கும் காணிகளை கையகப்படுத்துகின்ற தங்களுடைய தேவைகளுக்காக பயன்படுத்துகின்ற நிலைப்பாடு காணப்படுகின்றது.ஆகவே அவை முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.

**ஈஸ்டர் குண்டு தாக்குதல் தொடர்பில் பல்வேறு விடயங்கள் பேசப்பட்டு வந்தது அது தொடர்பில் புத்தகங்களும் வெளியிடப்பட்டிருக்கின்றது. ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் பேசப்பட்ட வெளிவந்த விடையங்கள் தொடர்பான விசாரணைகள் இன்று வரை முன்னெடுக்கப்படவில்லை. சர்வதேச ரீதியில் பேசப்பட்ட விடயங்கள் அவ்வாறே அமர்ந்து விட்டது. இவ்வாறான நிலையில் இந்த விடயங்களை எதிர்காலத்தில் தேர்தல்களில் வேறு விதமாக பயன்படுத்துவதற்கான சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றதா?**

எங்களுடைய மக்கள் கிழக்கு மக்கள் குறிப்பாக மட்டக்களப்பை சேர்ந்த மக்கள் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக பிள்ளையான் குற்றச்சாட்டப்பட்டிருக்கின்றார். அவருடன் மிக நெருக்கமாக இருந்த அசாத் மௌலானா சர்வதேச ஊடகத்திற்கு திட்ட தெளிவாக என்ன சம்பவங்கள் இடம் பெற்று இருக்கின்றது என்று தெளிவாக கூறியிருக்கின்றார். அந்த விடயத்துடன் எமது மக்கள் அவர் பற்றிய ஓரளவு விளங்கி இருந்த மக்கள் முற்று முழுதாக விளங்கி இருக்கின்றார்கள். அவர் சலுகைக்காக எதையும் செய்யக்கூடியவர் என்கின்ற அடிப்படையில் இன்று அவர்கள் விளங்கி இருக்கின்றார்கள்.சலுகைக்காக தன்னுடைய இனத்தை காட்டிக் கொடுத்தவர் என்கின்ற நிலையினை அறிந்திருந்தும் கூட இன்று மாவட்டத்தில் இருந்து ஏகப்பட்ட புத்திஜீவிகள் ஏகப்பட்ட படுகொலைகள் எல்லாம் நடந்து இருக்கின்றது. அவருடைய குழு தான் முன்னின்று நடத்தியது ஆகவே அந்த நிலைப்பாடு மக்களுக்கு தெரியும்.

தங்களை பாதுகாத்துக் கொள்வதற்காக தொடர்ச்சியாக புத்தகங்களை வெளியிடுவதை பார்த்திருப்பீர்கள் ஈஸ்டர் குண்டு தாக்குதல் தொடர்பாக பிள்ளையான் ஒரு புத்தகத்தை வெளியிட்டு இருந்தார் அந்த புத்தகம் வெளியிடப்பட்டது நோக்கம் என்ன என்பதுதான் மக்கள் மத்தியில் இருக்கின்ற கேள்வி. ஆகவே தன்னையும் தன்னைச் சூழ உள்ள பரிவாரங்களையும் பாதுகாத்துக் கொள்வதற்காக அந்த விடயத்தில் இருந்து தன்னை மறைப்பதற்காக தன்னை சுத்தமானவன் என்று காட்டிக் கொள்வதற்காக அந்த புத்தகம் வெளியிடப்பட்டதா என்கின்ற சந்தேகம் மக்கள் மத்தியில் இருக்கின்றது.

**முற்றும்**

## தேர்தல் கள... தொடர்ச்சி ...

1985 ஆம் ஆண்டு சிறிலங்கா அரசுக்கும் தமிழர் தரப்புக்கும் இந்தியாவின் ஆசீர்வாதத்தோடும் அனுசரணையோடும் நடந்த பேச்சுக்களில் தமிழர் தரப்பில் அனைவரும் இணைந்து ஒருமித்த குரலில் முன்வைத்த திம்புக்கோட்பாடுகள் தீர்வுக்கான அடிப்படைகளாக இருக்க வேணடுமென எமது அமைப்பு மிக திடமாக நம்புகிறது.

ஒற்றையாட்சிக்குட்பட்ட எந்தவொரு தீர்வையும் தமிழர்கள் நிராகரிப்பதை இந்தியா ஏற்று, தமிழரின் அந்த நிலைப்பாட்டுக்கு உறுதுணையாக நிற்பதோடு, தமிழர்தேசத்தை அங்கீகரித்து அதை பாதுகாக்கின்ற வகையிலானதும், தமிழர்கள் ஒரு போதும் இழக்கமுடியாத தங்களது சுயநிர் ணய உரிமையை, அனுபவிக்க கூடியதுமான ஒரு சமஸ்டித் தீர்வுக்கான தன் ஆதரவை வெளிப்படுத்தவேண்டும் எனவும் எமது அமைப்பு இந்தியாவை தீர்க்கமாக வேண்டிக் கொள்கிறது.

மேலும் ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்குள் கடந்த 12 ஆண்டுகளாக முடக்கப்பட்டுள்ள பொறுப்புக்கூறல் விவகாரத்தினை அங்கிருந்துசர்வதேசகுற்றவியல்நீதிமன்றத்திற்கு அல்லது சர்வதேச நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்வதற்கு இந்தியா முன்னின்று நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், இலங்கையின் கடற்பரப்பினுள் எல்லதாண்டி நுழையும் இந்திய மீனவர்களது இழுவைப்படகுகளால் தமிழ்த் தேசத்து மீனவர்களது வாழ்வாதாரம் முற்றாகப் பாதிக்கப்படுகின்றது. இவ்விடயத்தில் இந்திய அரசு உடன்நடவடிக்கை எடுத்து தமிழ்த் தேசத்து மீனவர்களது வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கோருகின்றோம்.

இறுதியாக, இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இநிதியாவின் தேசிய பாதுகாப்பு நலன்களை உறுதிப்படுத்திக கொள்வதில் தமிழ்த் தேசமும் எமது அரசியல் இயக்கமும் எப்போதும் உறுதுணையாக இருக்கும் என்பதனையும் இங்கு மீளவும் வெளிப்படுத்திநிற்கின்றோம்.'' என அந்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் அவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவை சந்தித்தார். அந்த சந்திப்பு குறித்து ஜெய்ஷங்கர் தனது X தளத்தில் பதிவிட்டுள்ளார்.

குறித்த பதிவில், முன்னாள் ஜனாதிபதி அவர்களைச் சந்தித்ததில் பெருமகிழ்ச்சி. இந்தியா இலங்கை இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பின் தற்போதைய முன்னேற்றம் குறித்து கலந்துரையாடப்பட்டது. அவரது தொடர்ச்சியான ஆதரவுக்காக எமது பாராட்டுகள் என அவர் தெரவித்துள்ளார்.

அதேசமயம் எஸ்.ஜெய்சங்கர் மற்றும் இலங்கை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று கொழும்பில் இடம்பெற்றது.

எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அண்டைய நாடான இந்தியாவிடம் இருந்து கிடைத்த உதவிகள் மற்றும் ஒத்தாசைகளுக்கு நன்றி தெரிவித்ததுடன், இரு நாடுகளுக்கும் இடையே பல நூற்றாண்டுகளாக நிலவிவரும் நட்புறவு, ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்திலும் அவ்வாறே பேணப்படும் என்றும் இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் தெரிவித்தார்.

இலங்கையில் தேர்தல்கள் இடம்பெறும் சமயம் தனது நிலையை உறுதிப்படுத்துவதற்காக இந்தியா என்போதும் தனது பிரதிநிதியை இலங்கைக்கு அனுப்புவது வழக்கம் என ஜெய்சங்கரின் வாவு குறித்து கருத்து வெளியிட்ட தென்னிலங்கை ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

## தென்னிலங்கை ... தொடர்ச்சி ...

மற்றும் சட்டத்தரணி நுவான் போபகே, இளம் ஊடகவியலாளர் சங்கத்தின் தரிந்து உடுவரகெதர, முன்னணி சோசலிஸ்ட் கட்சி மற்றும் புதிய ஜனநாயக மார்க்சிஸ்ட்-லெனி னிஸ்ட் கட்சி ஆகியவை புதிய அரசியல் இயக்கத்தின் பிரதான அமைப்பாளர்களாக உள்ளனர்.

இது குறித்து ஊடகங்க ளுக்கு கருத்து தெரிவித்த பல் கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் சம்மேளனத்தின் முன்னாள் அழைப்பாளர் வசந்த முதலிகே, "அமைப்பு மாற்றத்தை கோரி கடந்த காலங்களில் அரகலய மக்கள் போராட்டம் நடத்தப்பட்டது. கோரிய முறைமை மாற்றம் எதிர்ப்பாளர்கள் எதிர்பார்த்தது போன்று இடம்பெறவில்லை, தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போதுள்ள முறைமையை மேலும் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளார்'' என்று தெரிவித்தார்.

தற்போதைய அபிவிருத்திகளின் கீழ், நாட்டில் ஸ்திரத்தன்மை ஏற்படுத்தப்படவில்லை எனவும், மக்கள் தமது அன்றாட வாழ்வில் பாரிய சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். அந்தவகையில், இலங்கையின் எதிர்காலத்திற்காக புதிய அரசியல் அமைப்பை அறிமுகப்படுத்தும் நோக்கிலேயே புதிய அரசியல் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வசந்த முதலிகே மேலும் தெரிவித்தார்.

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.